a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

ஜனவரி 2019 January | இதழ் 336 ISSUE




# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

**Oldest Canadian Tamil Journal**



தமிழ் மரபுத் திங்கள்
தைப்பொங்கல் திருநாள்
வாழ்த்துகள் !





'தமிழர் தகவல்'
28வது ஆண்டு விருது விழா
அடுத்த மாதம்

சமூகத்துடன்
இணைந்த
வளர்ச்சி
ஸ்தாபிதம்-1991

Growing
with the
Community
ESTD-1991

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

விநியோக இணைப்பாளர்
இ. சிவலிங்கம்

பொதுமக்கள் தொடர்பு
என். குமாரதாஸன்
ராதா கிருஷ்ணசாமி
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்:
www.tamilsinformation.info

# இன(மறி)வாதம்!

பல தடவைகள், பல வருடங்களாக இங்குள்ள மைய ஊடகங்களிலும் பொதுவெளியிலும் ஆராயப்பட்டும் பேசப்பட்டும் வந்த விடயமே இது!

ஒரு தரப்பினர் இல்லையென்று கூற மறுதரப்பினர் இருக்கிறது என்று சொல்ல, இரண்டுக்குமிடையே சிலர், இருக்கலாம் - ஆனால் பெரியளவில் இல்லை என்று கூறிவந்ததை அதிகாரபூர்வமாக ஓர் அறிக்கை 'இருக்கிறது' என்று பதிவிட்டுள்ளது.

ரொறன்ரோ பொலிஸ் சேவையில் கறுப்பினத்தவருக்கு எதிராக இனவாத செயற்பாடுகள் இடம்பெறுகிறது என்பதை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்ந்துள்ளது மனித உரிமைகள் ஆணையம்.

இதன் வருடாந்த அறிக்கை கடந்த மாத முற்பகுதியில் வெளியிடப்பட்டது.

ரொறன்ரோ பொலிஸ் சேவையில் தேவையற்ற திடீர் சோதனை, கண்டபடியான தாக்குதல், நீதிக்குப் புறம்பான கைது, கொலைச் சம்பவங்கள் என்பவை கறுப்பினத்தவருக்கு எதிராக திட்டமிட்டு இடம்பெறுகிறது என்றவாறு இந்த அறிக்கையின் பல பக்கங்கள் சுட்டியுள்ளது.

"இதைத்தானே நாங்கள் கடந்த பல காலமாக தொடர்ந்து கூறி வருகிறோம், இப்போதாவது இதனை ஒப்புக் கொள்வீர்களா?" என்று கறுப்பின சமூகத் தலைவர்கள் இப்போது பகிரங்கமாகக் கேட்கின்றனர்.

15, 20 ஆண்டுகளுக்கு முன்னர் இங்குள்ள தமிழ்ச் சமூகம் மீதும் இனக்குரோத தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றதுண்டு. உணவகங்களிலும், பேருந்துகளிலும், நடைபாதைகளிலும் இவ்வாறான தாக்குதல் நடைபெற்றபோது சமூகம் வீதிகளில் கூடி நீதி கேட்டது ஞாபகமிருக்கிறது.

கறுப்பினத்தவர்மீது வெவ்வேறு வகையான வடிவங்களில் தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. இதில் பொலிஸார் சம்பந்தப்பட்டிருப்பது, வேலியே பயிரை மேய்வது போன்றது.

ரொறன்ரோ பொலிஸ் தலைமை அதிகாரியே கறுப்பினத்தவர் என்பதால் அவரது நிலைமை திரிசங்கு போன்றது. "இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்தும் எடுக்கப்படும்" என்பதைத் தவிர அவரால் வேறு எதுவும் கூற முடியாத நிலை.

ஒன்ராறியோ மாகாண பொலிஸ் (ஓ.பி.பி.) ஆணையாளரின் நியமனத்தில் சிக்குப்பட்டிருக்கும் முதலமைச்சர் டக் ஃபோர்ட்டுக்கு, இந்த அறிக்கை மீது கவனம் செலுத்த இப்போது நேரமில்லாதிருக்கலாம்.

ரொறன்ரோ பொலிஸ் சேவையின் முன்னாள் தலைவர்களில் ஒருவரான அலோக் முகர்ஜி இது தொடர்பாக எழுதியுள்ள கட்டுரையொன்றில், "ரொறன்ரோ பொலிஸ் சேவையில் கறுப்பினத்தவர் மீது இனவாதம் தொடருவது ஏன்?" (Why anti-black racisim persists in the Toronto Police Service) என்று கேள்வியெழுப்பியுள்ளார்.

இக்கேள்விக்கு உரிய பதிலைக் காண சம்பந்தப்பட்ட எவராவது முன்வரு- வார்களாயின், இன(மறி)வாதத்தின் உண்மையைக் கண்டுபிடிக்கலாம்.

பூனைக்கு மணி கட்டுவது யார்?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Circulation Coordinator
R. Sivalingam

Public Relation
N. Kumaradasan
Radha Krishnasamy
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website:
www.tamilsinformation.info

# கல்வியில் சாதனை புரிவதில் மரபணுக்களின் பங்கு

ஒரு குழந்தையின் மரபணுக்கள், பாடசாலையில் கல்வித் திறமையைத் தீர்மானிப்பதில் பங்கு வகிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பாடசாலைகளில் குழந்தைகள் எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறார்கள் என்பதில் பெரிய வித்தியாசம் இருக்கிறது. சமீப காலங்களில், குழந்தைகளின் திறமைகள் வித்தியாசப்படுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு காரணம் அவர்களது மரபணுக்கள்தான் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

ஆரம்பப் பாடசாலையில் பலதரப்பட்ட பாடங்களில் குழந்தைகள் சிறப்பாக செயல்படுவதில் மரபணுக்கள் பங்கு வகிக்கின்றன. ஆனால் ஒரு குழந்தை தொடர்ந்து பாடசாலையில் கல்வியில் சிறந்து விளங்குவதற்கு மரபணுவும், சுற்றுச்சூழல் காரணியும் எப்படி பங்காற்றுகின்றன என்பது தெரியவில்லை. இதுபற்றி ஆராய, இங்கிலாந்தைச் சார்ந்த 6,000 ஜோடி இரட்டையர்கள் "இரட்டையர்களின் (Twins) ஆரம்ப கால வளர்ச்சி" குறித்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களது ஆரம்பப் பாடசாலை முதல் கட்டாயக் கல்வி நிறைவு பெறும் வரையிலான தேர்வு மதிப்பெண்கள் ஆராயப்பட்டன.

இந்த புதிய ஆய்வின்படி இரட்டையர்களின் கல்வி வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவுக்கு நிலையாக இருப்பது தெரிய வந்துள்ளது.

ஆரம்பப் பாடசாலையில் நன்றாகப் படிக்கும் குழந்தைகள், கட்டாயக் கல்வி முடிவுறும் நேரத்தில் நடத்தப்படும் தேர்வுகளிலும் நல்ல செயல் திறனைக் காட்டுகிறார்கள். இரட்டையர்களை ஆய்வு செய்ததின் மூலமாக

(29ஆம் பக்கம் வருக)

# அமெரிக்க எல்லையூடாக வரும் அகதிகளின் பராமரிப்புச் செலவை இரு மாகாண அரசுகள் கேட்கின்றன

அமெரிக்காவிலிருந்து எல்லை கடந்து வரும் அகதிகளைப் பராமரிக்கும் முழுச்செலவையும் கனடிய மத்திய அரசாங்கம் தங்களுக்கு மீளளிக்க வேண்டுமென்று ஒன்ராறியோ மாகாண அரசும், கியுபெக் மாகாண அரசும் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன.

இவ்விடயத்தில் ஒன்ராறியோ மாகாண முதலமைச்சர் டக் ஃபோர்டும், கியுபெக் மாகாண முதலமைச்சர் பிராங்கோஸ் லெகோல்ட்டும் இணைந்து செயற்பட முன்வந்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து எல்லை கடந்து வரும் சட்டவிரோதமான அகதிகளைக் கனடாவில் குடியேற அனுமதித்திருக்கும் மத்திய அரசின் திட்டம், ஆட்சியிலிருக்கும் லிபரல் அரசாங்கத்தின் கொள்கையோடு சம்பந்தப்பட்ட முடிவு என்பதை இரு முதலமைச்சர்களும் தங்கள் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜஸ்ரின் ரூடோ அரசாங்கத்தின் எதிர்கால நோக்கத்தை இலக்காகக் கொண்டு அகதிகளை உள்வாங்கும் முடிவை நிறைவேற்ற இரண்டு மாகாண அரசாங்கங்களும் தங்கள் நிதியை செலவிட முடியாதென்பதே ஒன்ராறியோ மற்றும் கியுபெக் மாகாண அரசுகளின் நிலைப்பாடு. சமூக நிதியுதவி, வைத்தியப் பராமரிப்பு, கல்விச் சேவை போன்றவை மாகாண அரசுகளின் நிதி நிலைமையை மோசமாக்கி வருகின்றன.

2017-2018ம் ஆண்டு காலத்தில் ஓர் அகதியைப் பராமரிக்க மத்திய அரசு வருடமொன்றுக்கு சுமார் 14,300 டாலர்களைச் செலவிடுகிறது. இக்காலப் பகுதியில் மொதம் 340 மில்லியன் டாலர் அகதிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது. இதனைவிட மாகாண அரசாங்கங்கள் தம் பங்குக்கு இதனிலும் கூடிய தொகையை அகதிகள் பராமரிப்புக்குச் செலவிடுகின்றன.

2019-2020ம் ஆண்டு காலப்பகுதியில் ஓர் அகதிக்கு 16,600 டாலரும், மொத்தமாக சகல அகதிகளுக்கும் 396 மில்லியன் டாலரும் தேவைப்படுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. அகதிகள் வருகைக்காக எல்லையைத் திறந்து விட்டுள்ள மத்திய அரசு, இவர்களுக்காக இரண்டு மாகாண அரசுகளும் செலவிடும் தொகையை அவர்களுக்குத் தாமதமின்றி அவர்களுக்கு மீளளிக்க வேண்டுமென்று சம்பந்தப்பட்ட இரண்டு மாகாண அரசுகளும் ஜஸ்ரின் ரூடோவிடம் வலியுறுத்தியுள்ளன.

## Ontario and Qubec Premiers call for Federal Compensation for the Cost of Illegal Border Crossings

Ontario Premier Doug Ford and Quebec Premier François Legault are calling on the federal government to reimburse their provinces for the cost of supporting illegal migrants coming from the United States.

Premier Ford and Premier Legault committed to working together on this issue following discussions at the First Ministers' Meeting in Montréal, and to ensuring that the federal government fully compensates the provinces for the costs resulting from this unilateral and political decision.

"The impact on our social services and educational systems are being felt by the most vulnerable in cities and communities across Ontario and Quebec," said Ford. "The federal government made a deliberate decision to encourage illegal border crossers to enter Canada, while leaving the provinces to pick up the bill. It is time that the federal government took full responsibility for its own failed policies and paid its fair share."

According to a report from the federal Parliamentary Budget Officer (PBO), each migrant costs the federal government more than $14,300, or $340 million total in 2017-18. The PBO is projecting that these costs will increase to over $16,600 per migrant, or $396 million total, in 2019-20. The report does not include the hundreds of millions of dollars already spent by Ontario and Quebec to cover the cost of providing shelter, legal aid, social assistance and educational supports.●





றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோ சிம்கோ நகரிலுள்ள வீடொன்றிலிருந்து 9 வயதுச் சிறுமியொருவர் 911 அவசர இலக்கத்தை அழைத்தார். அந்த வீட்டுக்கு பொலிஸார் விரைந்து சென்றனர். தனது தாயார் வீட்டின் படுக்கை அறையைச் சுத்தம் செய்யுமாறு கூறியதை விரும்பாததால் அச்சிறுமி 911 இலக்கத்தை அழைத்தது தெரிய வந்தது. இவ்வகையான விடயங்களுக்கு பொலிஸாரை அழைப்பது தவறு என்று சிறுமிக்குக் கூறிய பொலிஸார் பெற்றோருக்குச் சில ஆலோசனைகளைச் சொல்லி விட்டுச் சென்றனர்.

கனடாவில் வங்குரோத்து (Bankrupcy) பிரகடனம் செய்வோர் தொகை அதிகரித்து வருவதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த வருடத்தின் அக்டோபர் மாதத்தில் மட்டும் 11,641 பேர் வங்குரோத்துப் பிரகடனம் செய்துள்ளனர். 2017ம் ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 9.2 வீதம் அதிகமாகும். 2010ம் ஆண்டுக்குப் பின்னரே இவ்வளவு தொகையானோர் வங்குரோத்து நிலைக்குச் சென்றது தெரிய வந்துள்ளது. வட்டி வீத அதிகரிப்பு, பொருட்களின் விலை உயர்வு, நிதி நெருக்கடி போன்றவை இதற்குக் காரணமென சம்பந்தப்பட்ட திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள விக்டோரியா நகரில் சந்தேகத்துக்கிடமான வாகனமொன்றை பொலிஸார் சோதனை செய்ய மறித்தனர். சாரதி கண் திறக்க முடியாத மதுபோதையில் இருந்ததைக் கண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் கொடி லப்பியர், அவரிடம் சாரதி லைசென்சைக் கேட்டார். தாம் சாப்பிட்டு வைத்திருந்த 'பர்கரின்' மிகுதியை அவர் பொலிஸாரிடம் நீட்டினார். தலைக்கேறிய மதுவிலிருந்த சாரதிக்கு லைசென்சும் 'பர்கரும்' வித்தியாசம் தெரியாததால் அவரை பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கையில் நாளொன்றுக்கு சிகரட் புகைப்பதற்காக 33 கோடி ரூபாவையும், மது அருந்துவதற்காக சுமார் 30 கோடி ரூபாவையும் பொதுமக்கள் செலவிடுகின்றனர் என்ற தகவல் அதிகாரபூர்வமாக வெளிவந்துள்ளது. அத்துடன் நாளொன்றுக்கு புகைத்தலால் 72 பேரும், மதுப்பாவனையால் 65 பேரும் மரணமடைவதாக இலங்கையின் சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. புகைத்தலால் நோய்வாய்ப்படுவோருக்கு சிகிச்சை அளிக்க 72 பில்லியன் ரூபாவை சுகாதார அமைச்சு செலவிடுகின்றது.

மகாராணிக்கு விசுவாசமாக பணியாற்றுவதற்கான பதவிப் பிரமாண வாசகத்தை மறுத்த ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள ஹேர்ஸ்ற் நகரசபைக்கு புதிதாகத் தெரிவான உறுப்பினர் கேற்றன் பெயிலகேன் தமது பதவியைத் துறந்துள்ளார். கனடிய பூர்விக குடியினருக்கு மகாராணியின் ஆட்சி நிர்வாகம் இழைத்த அட்டூழியங்களை தமதுரையில் கண்டித்தார். கனடாவுக்கு விசுவாசமாக சட்டங்களை மதித்து பணியாற்றுவேன் எனத் தெரிவித்து இவர் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

கனடிய மக்களின் வாழ்க்கைச் செலவு இந்த ஆண்டில் அதிகரிக்குமென பல்கலைக்கழகங்களின் கூட்டறிக்கை தெரிவிக்கிறது. உணவுப் பொருட்களின் விலை 1.5 முதல் 3.5 சதவீதத்தால் அதிகரிக்கும். மரக்கறிகளின் விலை 4 முதல் 6 சதவீதத்தால் அதிகரிக்கும். உணவகங்களில் சாப்பாட்டின் விலை சுமார் 2 வீதத்தால் அதிகரிக்கும். சராசரியாக ஒருவரின் வாழ்க்கைச் செலவு இவ்வருடத்தில் 400 டாலர்களால் அதிகரிக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## யோர்க் பிராந்திய மதுபோதைச் சாரதிகளின் பெயர்கள் பகிரங்கமாகும்!

மதுபோதையில் அகப்படும் வாகன சாரதிகளின் பெயர் விபரங்களை வாராந்த அடிப்படையில் பகிரங்கப்படுத்த யோர்க் பிராந்தியப் பொலிஸார் தீர்மானித்துள்ளனர். மதுபோதைச் சாரதிகளை கட்டுப்பாட்டில் கொண்டுவர இது உதவுமென பொலிஸார் எதிர்பார்க்கின்றனர்.

மார்க்கம், றிச்மன்ட்ஹல், வோன், நியுமார்க்கட், அரோரா, ஸ்ரோவில் உட்பட 9 நகரங்கள் யோர்க் பிராந்திய- த்தில் உள்ளன. மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை பகிரங்கப் படுத்துவதன் மூலம் மற்றவர்களை அவ்வாறு செய்யாது தடுக்கும் நோக்கத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமை யிலும் யோர்க் பொலிஸ் திணைக்களத்தின் இணையத்தளத்தில் சாரதிகளின் பெயர்கள் வெளியிடப்படும். கடந்த மாதத்தில் ஒரு வார விடுமுறையில் மட்டும் 16 பேர் மதுபோதைக் குற்றத்தில் அகப்பட்டதாக பொலிஸ் தலைமை அதிகாரி எரிக் ஜொலிஃப் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தின் நவம்பர் வரையான 11 மாதங்களில் 1400 மதுபோதைக் குற்றச்சாட்டுகளின் கீழ் சாரதிகள்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

டுர்ஹம் பிராந்தியப் பொலிஸாரும், ஹால்ற்றன் பிராந்தியப் பொலிஸாரும் மதுபோதைச் சாரதிகளின் விபரங்களை ஏற்கனவே பகிரங்கமாக வெளியிட்டு வருகின்றனர். சவுத் சிம்கோ பொலிசும் விரைவில் இந்த நடைமுறையை பின்பற்றவுள்ளது.

## அளவுக்கதிகமான போதைவஸ்து மரணங்கள் அதிகரிப்பு!

அளவுக்கதிகமான போதைவஸ்துப் பாவனையால் ஏற்படும் மரணங்கள் கனடாவில் அதிகரித்து வருவதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ரொறன்ரோவில் கடந்த நவம்பர் மாதத்தில் 19 பேர் இதனால் மரணமாகியுள்ளனர்.

அநேகமானவர்கள் டவுன்ரவுண் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள். அல்பேர்ட்டாவில் கடந்த மாதம் குறிப்பிட்ட 48 மணித்தியாலத்தில் 22 பேர் அதிக போதைவஸ்துப் பாவனையால் பாதிக்கப்பட்டதாகவும், ஒருவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



‘கலாநிதி’ பால. சிவகடாட்சம்

# கண்டறியாத காதலன்

அவன் பெயரென்ன? ஊரென்ன? தொழில் என்ன? எதுவுமே அவளுக்குத் தெரியாது. அவனை அவள் நேரிலே பார்த்ததும் கிடையாது. அவள் அவனைப் பற்றி அறிந்து கொண்டதெல்லாம அவனை அறிந்தவர்கள் மூலமே.

முதலில் அவனது பேரைக்கேட்டாள். அடுத்து அவனது தோற்றம் பற்றிக்கேட்டாள். பின்னர் அவனிருக்கும் ஊர்பற்றிக் கேட்டறிந்தாள். அவற்றையெல்லாம் கேட்டபின்னர் அவன்மீது கொண்ட தீவிரமான காதலினால் பித்துப்பிடித்தவள் போலானாள்.

அன்னையையும் தந்தையையும் அன்றே விட்டுச் சென்றாள். அவள் வாழ்ந்த ஊரார் ஆண்டாண்டு காலமாகப் பேணிவந்த கட்டுப்பாட்டை மீறினாள். (ஒரு ஆண் தான் விரும்பும் பெண்ணைத் தேடிச் செல்லலாம், ஆனால் ஒரு பெண் ஆணைத் தேடிச் செல்லக்கூடாது என்பதுதான் அந்தக் கட்டுப்பாடு) காதலினால் தன்னை மறந்தாள், தன் பெயரைக் கெடுத்துக்கொண்டாள். காதலனிடம் தன்னை முழுமையாக ஒப்படைத்தாள்.

இத்தனைக்கும் அவள் அவனைப்பற்றி என்னதான் கேட்டறிந்திருப்பாள்? அவனுக்கு என்று ஒரு பெயர் கிடையாது. ஓர் உருவம் கிடையாது. பிச்சைக்காரக் கோலத்திலும் அவன் இருப்பான். சுடுகாட்டிலும் வாழ்ந்திருப்பான். இவற்றைத்தானே அவள் கேள்விப்பட்டிருத்தல் கூடும்.

இவற்றையெல்லாம் கேட்டபின்னரும்கூட அவன்மேல் தீராத காதல்கொண்டாள். ஆம். “பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்.” இருந்தும் அவளையும் அவனையும் அறிந்தவர்கள் அவளைத் திட்டவில்லை. மாறாக அவள் காதலைப் போற்றிப் பாடினார்கள். அப்பாடலைக் கோயிலில், அவள் தலைவன், அந்த இறைவன் முன்னிலையில் பாடி மகிழ்ந்தார்கள்.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

அப்பர் சுவாமிகள் பாடிய இக் காதல் கதையினால் கவரப்பட்ட கவிஞர் கண்ணதாசன் தானும் அக்காதலை இக்காலத்தவரும் கேட்டு மகிழத் தனது இனிய தமிழில் பாடிவைத்தார்.

அன்றொருநாள் அவனுடைய பேரைக்கேட்டேன்
அடுத்தநாள் அவனுடைய ஊரைக்கேட்டேன்
இன்றுவரை அவன் முகத்தை நானும் காணேன் - அவன்
என்னைத்தேடி வரும்வரையில் விடவும் மாட்டேன்

அந்தக் காதலி அவனைத் தேடிச் சென்றாள். இந்தக் காதலியோ அவன் தன்னைத் தேடிவருவான் என்ற நம்பிக்கையில் காத்திருக்கின்றாள்.

The lover who never showed up
Once she asked about his name
Then she learned about his appearance
Later she inquired about his country
Yet,* she fell madly in love with him.
She deserted her mother and father
She freed herself from the restraint
imposed by age old customs
She forgot who she was and lost consciousness of her reputation
She surrendered to the feet of her lover





*The saint says “yet” because what the girl could have learned about that person is that he had no name, no specific country to claim as his own, dresses in an attire of a beggar and spends his time alone on cremation ground (at the end of the universe).

This story about the devotion of a young girl to Lord Siva was sung in one of his hymns by the Saiva saint Appar. Poet Kannadasan was so impressed by this wonderful story he adopted the hymn to compose his own poem to express the unbound love of a young girl towards her hero.

One day I learned his name
The next day I asked about his country
Until now I have not seen his face, yet
I will not let him go until he comes
looking for me.●




குமார் புனிதவேல்

# நாம் விழிப்படையாவிடின் இப்படித்தான் நடக்கும்

கடந்த கார்த்திகை மாதம், இந்து சமுத்திரத்திலுள்ள மொறிஷியஸ் என்னும் அழகிய தீவுக்குச் செல்லும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இங்கு அண்ணளவாக 75,000 தமிழர்கள்வரை வாழ்கிறார்கள். இவர்களை நாம் இன்று மொறிஷியஸ் தமிழர் என்று கூறுகிறோம். இவர்களை மட்டுமன்றி, இப்பூமிப் பந்திலுள்ள தமிழர்கள் அனைவரையுமே இப்போது ஒரு அடைமொழியுடன் அழைக்க வேண்டிய கட்டாய நிலையில் நாம் உள்ளோம்.

கனடியத் தமிழர், அமெரிக்கத் தமிழர், பிரித்தானியத் தமிழர், பிரெஞ்சுத் தமிழர் என இப்பட்டியல் நீண்டு கொண்டே செல்லுகிறது. இவர்களில் 54,000 பேர் தமது தாய்மொழி தமிழ் என்றனர். எனினும், 3,650 பேர் மட்டும் தங்கள் வீட்டில் தமிழை அதிகம் பேசுவதாகவும், மேலும் 3,300 தமிழர் இன்னொரு மொழியும் வீட்டில் பேசுவதாகவும் அரச கணக்கெடுப்புக் கூறுகின்றது.

மொரிஷியஸிலுள்ள 200 இளநிலைப் பள்ளிகளில், 100 பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்படுகிறது. தலைநகர் Port Louisல் இலக்குவனார் பெயரில் தமிழ்ப்பள்ளி ஒன்று 2013ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கணிசமானளவு ஊடகங்களில் தமிழ் பாவிக்கப்படுகின்றது.



Ellorukum Vanakkam.

Enaku Neengal thantha uthavikum othulaipukkum Enathu Nanri.

Ungalodu Irunthathu enaku Mihavum Santhosam. Enathu Kudumbathodu Irunthathu Pola mahilchiyaaka Elu naadkalum Irunthen.

Naan Ethavathu Thavaru Seithirunthal Ennai Manikavum.

Neengalum Engalodu ~~Santhosa~~ santhosamaaka Iruntheerkal Endru ninaikindren.
Inge irunthu nalla memories Kondu Pokindreer kal Endru nambukindren.
Meendum Ungalai santhika aavalodu Kathu Irukindren.
Naan Ungalai Kattayam miss Panuven.
Ungaluku Enathu Manamaarntha Nandri

எமது சுற்றுலா வழிகாட்டியாக பிரவீன் என்னும் மொரிஷியஸ் இளைஞர் வந்திருந்தார். நாம் பேசும் தமிழை அவர் நன்கு விளங்கிக் கொண்டாலும், தமிழில் பேசுவதென்பது அவருக்குக் கடினமாக இருந்தது. பொதுவான 'வணக்கம்', 'எப்படி இருக்கிறீர்கள்', 'வாங்கோ' போன்ற சொற்களைத் தெரிந்து வைத்திருந்தார்.

பழக மிக இனிமையானவர். எமது சுற்றுலா முடிவடையும் வேளை எமக்கு ஒரு ஆச்சரியம் காத்திருப்பதாகச் சொன்னார் பிரவீன். அந்த ஆச்சரியத்தைப் பற்றி அவர் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறவும் எமது ஆவலும் அதிகரித்தது.

சுற்றுலாவின் இறுதி நாள் பயணத்தில் பிரவீன் தனது நன்றியுரையை, அழகு கொஞ்சும் பிள்ளைத் தமிழில் மிக மிக ஆர்வத்துடன் வழங்கவும், பயணிகள் எமது கரகோசமும் பேருந்தைப் பிளந்தது. பிரவீனின் மகிழ்ச்சிக்கும் அளவில்லை. விடைபெறுமுன் அந்த அழகான நன்றியுரைக்கு நன்றி கூறிவிட்டு, அவரிடம் அந்த நன்றியுரையின் பிரதியைத் தர முடியுமா எனக்கேட்டேன். மிகுந்த மகிழ்ச்சியுடன் தந்தார். (அவரது கையெழுத்திலான அவரது நன்றியுரை இங்கு பிரசுரமாகியுள்ளது)

நாங்கள் விழிப்படையாவிடின், எமது சந்ததியினரும் இப்படித்தான் மாற நேரிடும். சிந்திக்க வேண்டிய தருணம் இது.●

# நீங்கள் அழைத்தால் உங்கள் வாசலுக்கு நான் வருவேன்!

ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்கள் தங்கள் வட்டார மக்களுக்கு கிரமமாக செய்திக் கடிதம் அனுப்பி வருவது வழக்கம். தங்களின் செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளை ஒளிப்படங்களுடன் இதில் பிரசுரம் செய்வது தொடர்நடைமுறை. ஆனால் ஓர் உறுப்பினர் தமது டிசம்பர் மாதச் செய்திக்கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார் 'ஏதாவது கருத்துகள், ஆலோசனைகள் எனக்குத் தெரிவிக்க விரும்பினால் என்னை அழையுங்கள், உங்கள் வீட்டு வாசலுக்கு நான் வருவேன்" என்று தனது வட்டார மக்களுக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

இந்த உறுப்பினர் யார் தெரியுமா? எற்றோபிக்கோ வடக்கு நகரசபை உறுப்பினரான மைக்கேல் ஃபோர்ட் என்பவரே இந்த உறுப்பினர். ஒன்ராறியோ மாகாண முதலமைச்சர் டக் ஃபோர்ட், காலஞ்சென்ற முன்னாள் மேயர் றொப் ஃபோர்ட் ஆகியோரின் மருமகனே (சகோதரியின் மகன்) இவர். ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்களில் வயது குறைந்தவரான இவரை ரொறன்ரோ பொலிஸ் சேவைக்குழுவின் ஓர் உறுப்பினராக ரொறன்ரோ நகர மேயர் ஜோன் ரோறி கடந்த மாதம் நியமித்துள்ளார்.●



அ. முத்துலிங்கம்

# தனித்து நின்ற பெண்

அந்த உணவகத்துக்குள் நுழைந்தபோது நான் முதலில் பார்த்தது அந்த இளம் பெண்ணைத்தான். இரண்டு நாற்காலிகள் போட்ட சதுரமான மேசையில் தனியாக உட்கார்ந்திருந்தார். விருந்துக்குப் புறப்பட்டதுபோல ஒப்பனை செய்யப்பட்ட முகம். நல்ல ஆடையில் அலங்காரமாக காணப்பட்டார். என்னை இழுத்தது நீண்டுபோன அவருடைய கண்கள்தான். முகத்தில் என்ன உணர்ச்சி என்று சொல்லமுடியவில்லை. மகிழ்ச்சி அல்லது எதிர்பார்ப்பு இரண்டும் கலந்துகூட இருக்கலாம். கபில நிறத் தேகம். இந்தியராகவோ, ஈழத்தவராகவோ கயானா நாட்டுக்காரராகவோ இருக்கலாம். நிச்சயமாக சொல்லத் தெரியவில்லை.

ஏனைய மேசைகள் ஒவ்வொன்றாக நிரம்பத் தொடங்கின. மதிய உணவு என்பதால் அநேகமாக அலுவலக பணியாட்கள்தான். காலநிலை காதலர்களுக்கு உகந்ததானதால் அநேக காதலர்களும் அங்கங்கே காணப்பட்டனர். இந்தப் பெண் மட்டும் தனிய அந்த மூலையில் அமர்ந்திருந்தார். அவருடைய மேசைக்கு வலது பக்கம் வாசல் இருந்தது. அடிக்கடி அந்த வாசலைப் பார்த்தார். யாரையோ எதிர்பார்க்கிறார். காதலனாகத்தான் இருக்கும்.

நான் நிறுத்தத் தெரியாமல் கதைக்கும் நண்பன் ஒருவனுடன் வந்திருந்தது எனக்கு வசதியாகப் போய்விட்டது. அவனாகவே விதம்விதமான உணவு வகைக்கு ஆணை கொடுத்தான். அந்தப் பெண்ணில் அமைதியின்மை தெரிந்தது. செல்பேசியில் ஏதோ எழுதி அனுப்பினார். குறுஞ்செய்தியாக இருக்கலாம். பதில் ஒன்றும் வந்ததாகத் தெரியவில்லை. சிறிது நேரம் பார்த்துவிட்டு டெலிபோனில் யாரையோ அழைத்தார். மறுபக்கத்தில் ஒருவரும் எடுக்கவில்லை. எரிச்சலுடன் செல்பேசியை மேசையில் எறிந்தார். மறுபடியும் வாசலைப் பார்க்க ஆரம்பித்தார்.

எங்கள் உணவு வந்துவிட்டது. என்னால் அமைதியாக உண்ண முடியவில்லை. அந்தப் பெண்ணையே பார்க்கத் தோன்றியது. பரிசாரகன் மறுபடியும் அவர் முன்னேபோய் நின்றான். 'யாரோ நண்பர் வருவதற்காக காத்திருக்கிறேன். அவர் தொழில் சம்பந்த - மான முக்கிய கூட்டத்தில் இருக்கிறார். விரைவில் வந்துவிடுவார்.' அப்படித்தான் ஏதோ சொல்லியிருக்கவேண்டும். மறுபடியும் செல்பேசியை எடுத்து நீண்ட குறுஞ்செய்தி ஒன்று அனுப்பினார். அவருடைய அழகான முகத்தில் பதற்றம் வந்து இறங்கியது. மெனு அட்டையை மேலும் கீழுமாகப் படித்தார். பின்னர் வாசலைப் பார்க்க ஆரம்பித்தார். நாங்கள் உணவை முடித்து ஒருமணி நேரம் தாண்டிவிட்டது. உணவு வாசனை நிறைந்திருந்தது. அந்தப் பெண் என்ன நினைத்தாரோ பரிசாரகனை அழைத்து தன் உணவுக்கு ஆணை கொடுத்தார். உணவு வந்தாலும் அதைத் தொடவில்லை. செல்பேசியை எடுத்துப் பார்ப்பதும், வாசலை நோக்குவதுமாக நேரத்தைக் கழித்தார். பின்னர் ஏதோ நினைத்து உணவை உண்ண ஆரம்பித்தார். உணவகம் நிறைந்து ஒரே சத்தமாகி விட்டது. பக்கத்து மேசையில் இருந்து ஒருவர் வந்து அவருடைய மேசையில் சும்மா இருந்த நாற்காலியை தான் கடன் வாங்கலாமா என்று கேட்டார். அவருக்கு அழுகை வந்தது. 'இல்லை. என் நண்பர் வருகிறார். எடுக்கவேண்டாம்' என்றார். பின்னர் குனிந்தபடியே உணவை கரண்டியால் அள்ளி வாயில் போட்டார். பரிசாரகர் வந்து பணிவாக எதையோ கேட்டபோது இவர் தலையை மட்டும் ஆட்டினார்.

நாங்கள் உணவை முடித்துவிட்டு இனிப்பை சுவைத்துக் கொண்டிருந்தோம். அப்பொழுது எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. இரண்டு சீனப் பரிசாரகிகள் ஒரு தட்டிலே கேக் ஏந்தியபடி நடன அசைவுகளுடன் வந்தனர். கேக்கின்மேல் ஒரு மெழுகுதிரி எரிந்தது. உரத்த குரலில் பிறந்தநாள் வாழ்த்து பாடலை பாடியபடியே மேசையை அணுகினர். எல்லோருடைய பார்வையும் அந்தப் பெண்ணின்மேல் விழுந்தது. இரண்டு பரிசாரகிகளும் மெய்க்காவலர்போல அவருடைய இருபக்கத்திலும் நின்றனர். அவர் மெழுகுதிரியை ஊதி அணைத்துவிட்டு கேக்கை வெட்டினார். பின்னர் தன்கையால் ஒரு சிறுதுண்டை எடுத்து தன் வாயினுள் வைத்தார். அவருக்கு ஊட்டவோ, அவர் ஊட்டிவிடவோ ஒருவரும் இல்லை. பரிசாரகிகள் திரும்பிப் போயினர்.

நாங்கள் இனிப்பை முடித்துவிட்டு கோப்பி குடித்துக்கொண்டிருந்தோம். அன்று நண்பர் பேசியது ஒன்றுமே என் நினைவில் இல்லை. பார்வையும் நினைவும் அந்தப் பெண் மேலேயே இருந்தது. மறுபடியும் பெண் ஒருமுறை வாசலைப் பார்த்தார். அவர் முகத்தில் அவமானமும் அளக்க முடியாத சோகமும் கலந்திருந்தது. கைகாட்டி பரிசாரகியை அழைத்து அவள் காதுகளில் என்னவோ சொன்னார். சிரிது நேரத்தில் அவர் சாப்பிட்ட பில் கணக்கை கொண்டுவந்து கொடுத்தபோது கடன் அட்டையை நீட்டினார். அது வேலை செய்யவில்லை. பின்னர் தன் கைப்பையை திறந்து காசை எண்ணிக் கொடுத்தார்.

பரிசாரகர் 'மீதிக் கேக்கை கட்டித் தரவோ?' என்று கேட்க அவர் வேண்டாம் என தலை ஆட்டினார். எழுந்து நின்று கதிரையில் மாட்டியிருந்த மேலாடையை எடுத்து அணிந்தார். கைப்பையை தோளிலே மாட்டினார். பரிசாரகர்கள் வந்து மேசையை சுத்தம் செய்து அடுத்த வாடிக்கையாளருக்கு தயார் செய்தார்கள். அப்பொழுதும் அந்த பெண்ணுக்கு புறப்பட மனம் வரவில்லை. வாசலை பார்த்தபடி அப்படியே தனியாக நின்றார்.

பெயன் மழை துறந்த புலம்பு உறு கடத்துக்  
கவை முள் கள்ளிக்காய்விடு கடு நொடி  
துதை மென் தூவித் துணைப் புறவு இரிக்கும்  
அத்தம் அரிய என்னார் நம் துறந்து  
பொருள் வயிற் பிரிவாராயின் இவ்வுலகத்துப்  
பொருளே மன்ற பொருளே  
அருளே மன்ற ஆரும் இல்லதுவே.  
குறுந்தொகை _ 174 (வெண்பூதியார்)



எஸ். ஜெகதீசன்

# கூடவே நானும் !

பாலியல் துன்படுத்தலுக்கு உள்ளாகியிருந்த சமூகபோராளியான தாரணா பர்க் (Tarana Burke) என்பவரால் உலகிலேயே முதன்முதலாக கூடவே நானும் (#Me Too) இயக்கம் அமெரிக்காவில் 2006ம் ஆண்டு தோற்றம் கண்டது.

கூடவே நானும் இயக்கம் என்பது பெண்மையின் திண்மையை பாதுக்காகவென பெண்களால் பெண்களுக்காகச் செயல்படுத்தப்படும் உளவியல் சார்ந்த ஓர் இயக்கமாகும்.

மாசற்ற மனங்களுள்ள பாதிக்கப்பட்ட பெண்களின் அறச்சீற்ற வெளிப்பாட்டின் மூலம் பாதிப்பை கொடுத்த ஆண்களுக்கு ஊமை வலியை ஏற்படுத்தும் ஒரு களமாக கூடவே நானும் இயக்கம் பார்க்கப்படுகின்றது.

பகிரங்கமாக பேசுவது ஒழுக்கமீறல் என்றோ சாதுரியமாகச் சமாளிக்க வேண்டிய சிக்கல் என்றோ காலகாலமாக இருந்துவந்த புரிதலை நிராகரிக்கும் தைரியத்தை ஊக்கும் களமென களமாடுகின்றது.

பாதிக்கப்பட்ட பெண்கள் மௌனத்தை கலைக்கின்றார்கள். பெரும் எண்ணிக்கையில் வெளிப்படையாகப் பேச முன்வருகின்றார்கள். அவமதிப்பை எதிர்கொள்கின்றார்கள். அவ நம்பிக்கையை தகர்க்கின்றார்கள். உலகள-வில் விவாதங்களை உருவாக்குகின்றார்கள். வாழ்க்கையில் காயப்படுத்தும் விடயங்களே கற்றுக் கொடுக்கவும் செய்கின்றன என்ற கருத்தை சமூகத்தில் விதைக்கின்றார்கள்.

நலிவடைந்த பெண்கள் விரும்பாத நிகழ்காலத்தை மாற்றி விரும்பும் எதிர்காலத்தை எதிர்பார்ப்புடன் எதிர்கொள்ள வைக்கும் பொது மேடையாக சமூக வலைத்தளமே அதிலும் குறிப்பாக கீச்சகமே (Twitter) இதன் முக்கியமான தளமாக அமைகின்றது. Hashtag மூலமான அதன் பதிவும் பகிர்வும் துரிதமாகின்றன.

வெட்கப்படாத ஆண்களையும் வெட்கப்பட வைக்கின்றது வெளியே விழுந்த இதயம். கபடம் வஞ்சகம் பழிவாங்கும் மனோபாவத்தை நினைவின் தடங்களாக்கி, அற்ப ஆத்ம சந்தோசம் அடைபவர்களால் நல்லெண்ணம் கொண்ட பொது மனிதர்கள் சமூக சேவையில் இருந்து அந்நியப்படும் அநியாயமும், அறியப்பட்டவர்கள் மீது அவதூறு பரப்பும் அநாகரிகம் நாகரிகமா - வதும் இப்பொழுது வலைத்தளங்களில் இழிந்ததாய் இறக்கப்பட்டு மௌனமாக சத்தம் போடுகின்றது.

கூடவே நானும் இயக்கம் வழக்குத் தொடுக்கும் இயக்கமுமல்ல. பஞ்சாயத்து செய்யும் இயக்கமுமல்ல. அல்லது பெண்களுக்கெதிரான அனைத்து அடக்க ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான செயற்திட்டம் கொண்ட அமைப்புமல்ல.

குற்றச்சாட்டு உண்மையல்ல எனின் அதற்கான நீதித்தீர்ப்பை குற்றம்சாட்டப்பெற்ற - வர் கோரமுடியும். குற்றச்சாட்டு உண்மையெனில் அதை ஒப்புக் கொள்வதும் அதற்காக மனம் வருந்தி மன்னிப்பு கோருவதும் ஒழுக்கசீலர்களுக்கு வீரியம் சேர்க்கும். பாதிக்கப்பட்டவர் மீது ஏற்படும் பரிதாபமும் பச்சதாபமும் பாதித்தவர் பகிரங்கமாக கோரும் மன்னிப்பால் உடனடியாகவே அவர் பக்கம் சாய்ந்துவிடும் விநோதம் கணத்தில் அங்கு நிகழ்ந்துவிடும்.

ஆளிறங்க முடியாத ஆழத்தை அடைகின்றது துப்பப்பட்ட இதயம்!

மீ ரூ என புகார் கொடுக்காதுவிடின் யூ ரூ என களங்கப்படுத்தி கலங்கடிக்கத் தவறாது எமது சமுதாயம் என சீதாபிராட்டி மூலம் எமக்கு உணர்த்திய கம்பராமாயணம்தான் மீ ரூ வின் முன்னோடி என கற்பனையில் கனவுகாணத் தயங்காத சமுதாயம் எமது சமுதாயம் என்பது விந்தையானது.

அதென்ன கூடவே நானும்! மீ ரூ என்றால் நானும் அல்லது நானும்தான் என்றல்லவா வரவேண்டும் என மிகவும் சாதாரண விடயத்தையே ஆராயும் மனித மனம் - வேறு யாரோ ஒருவருக்கு நடத்தை சரியில்லை என்ற அவதூற்றை மட்டும் சட்டென நம்புவது விசித்திரமானது. கீச்சகத்தில் (# We Too) கூடவே நாமும் என்ற (ஹேஸ்டேக்) பிரிவும் உள்ளது. - அது ஆண்களுக்கானது! பயன்படாத வார்த்தைகளை அதில் பயன்படுத்துவார்களோ. யாரறிவார்?●

# தனித்து நின்ற...

In the desolate, rain-forsaken land
The twisted kalli's pods
Open with a crackle
Frightening the mating pigeons
with their close-knit downy feathers.
He has left me languishing.
'In search of wealth,' he said.
He did not mind the risks on the way.
If it comes to that,
then in this world
wealth has all support
and love must stand alone

[இந்தப் பாடலை மொழிபெயர்த்தவர் பன்மொழி அறிஞரான ம .லெ. தங்கப்பா. சாகித்திய விருது பெற்ற இவர் சமீபத்தில் இறந்துபோனார். இவரை எண்ணும் போதெல்லாம் இந்தப் பாடல்தான் என் ஞாபகத்துக்கு வரும். பாடல் நினைவுக்கு வரும் போதெல்லாம் மேலாடை நுனியை கழுத்துடன் சேர்த்து பிடித்துக்கொண்டு எழுந்து தனியாக நின்ற இந்தப் பெண்ணின் நினைவு மனதில் வந்து போகும்.]●

# ஒன்ராறியோ அரசில் லிபரல் கட்சிக்கு மேலும் பாதிப்பு

ஒன்ராறியோ மாகாண அரசில் லிபரல் கட்சி அதிகார உரிமையை பெற முடியாதவாறு சட்டமாற்றம் கொண்டுவரப்படுகி-றது. எந்தவொரு கட்சியாவது அதிகார உரிமையைப் பெற வேண்டுமானால் சட்டசபையில் ஆகக்குறைந்தது எட்டு உறுப்பினர்கள் இருக்க வேண்டும். லிபரல் கட்சிக்கு ஏழு உறுப்பி-னர்கள் மட்டுமே உள்ளனர். இதனால் அதிகார உரிமையைப் பெறும் எண்ணிக்கையை ஏழாகக் குறைக்குமாறு லிபரல் கட்சியினர் கேட்டுவரும் வேளையில், இதனை பத்தாக அதிகரிக்க மாகாண கன்சர்வேடிவ் அரசு தீர்மானித்து - ள்ளது. தற்போது மாகாண அரசில் 124 உறுப்பினர்கள் உள்ளனர்.●



கனகேஸ்வரி நடராஜா

# பாடசாலைச் சிறார் நிலமை நன்றாக இல்லை

ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பாடசாலைப் பிள்ளைகளின் உடல், மனநிலை பற்றிய விபரங்கள் சேகரிக்கப் - படுகிறது. 2017ல் ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையை சார்ந்த 220,000 மாணவர்கள் இதில் பங்குபற்றினார்கள். இற்றைக் காலம்வரை இந்த ஆய்வில் ஏழாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரையுள்ள மாணவர்களே இதில் பங்குபற்றினார்கள். இம்முறைதான் நாலாம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்புவரையுள்ள மாணவர்களும் இந்த ஆய்வில் சேர்க்கப்பட் - டனர். இதன்மூலம் கிடைக்கப்பெற்ற தரவுகளை நோக்கும்போது இன்றைய மாணவர்களின் கல்வி அனுபவங்கள், உடற்சுகம், மனநலம் (Educational Experience, Physical Health, Emotional Well Being) என்பன ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட புள்ளிவிபரங்களிலிருந்து மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. இதன் விபரம் வருமாறு:

1. 7-12 வகுப்பு வரையுள்ள பிள்ளைகளை தங்களுக்கு ஆசிரியர்களோடோ, பாடசாலைகளோடோ பெரிதாக நெருங்கிய தொடர்பு இல்லையென்கிறார்கள்.

2. உணவுப் பழக்கவழக்கங்கள், தேக ஆரோக்கியம், சுயமதிப்பு என்பவற்றில் பெரும் வீழ்ச்சி காணப்படுகிறது.

3. அதிகமான பிள்ளைகள் பதற்றம், மனஅழுத்தம், கவலை கொள்வதற்கு பாடசாலை அடைவுகளே காரணமாக அமைகிறது.

4. கணினித் திரைகளின் (திரை நேரம்) முன்னால் கழிக்கும் நேரத்தில் உயர்ச்சி காணப்படுகிறது. அதிலும் சமூக உறவுகளோடு செலவழிக்கும் நேரம் மிகவும் கூடியுள்ளது.

7-12ம் வகுப்பு மாணவர்களுக்கு பாடசாலையோடோ, ஆசிரியர்களோடோ நெருங்கிய தொடர்பு காணப்படுவதில்லையென்பதை நான் அனுபவரீதியாகக் கண்டிருக்கிறேன். கீழ்வகுப்புகளில் - அதாவது அரசாங்கப் பாடசாலைகளில் கல்வி கற்கும்போது ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு வகுப்பாசிரியர் இருப்பார். அவரோடுதான் சிறுபிள்ளைகள் தமது முழுநேரத்தையும் செலவிடுவார்கள். இக்காலகட்டத்தில் இவர்களுக்கு ஆசிரியரே சகலதும். பாடசாலையை இரண்டாம் வீடாகவே நினைக்கிறார்கள். வகுப்புகள் மேலே செல்லச் செல்ல ஆசிரியர்களோடு நெருக்கம் குறைகிறது. அதிலும் இரண்டாம் நிலைப் பாடசாலையில் வகுப்பு ஆசிரியர் என்ற அமைப்பு கிடையாது. மாணவர்கள் தாங்கள் தெரிவு செய்துள்ள பாடங்களுக்கமைய ஒரு நாளைக்கு ஒன்றேகால் மணித்தியாலங்கள் கொண்ட 3 வகுப்புகளுக்குச் செல்வார்கள். இதனால் ஒவ்வொரு ஆசிரியரோடும் ஒரு நாளைக்கு ஒன்றேகால் மணித்தியால உறவுதான் ஏற்படுகிறது. இதனால் இவர்களுக்கு ஆசிரியர்களோடோ, சக மாணவர்களோடோ பெரிதாக உறவு ஏற்படுவதில்லை. பிரச்சனைகள், கவலைகள் வரும்போது தமக்கென உரிய வழிகாட்டி ஆலோசகர்களோடு சென்று பேசுவார்கள். அதனைக்கூட எல்லா மாணவர்களும் செய்வதில்லை.

உணவுப் பழக்கவழக்கங்கள், தேகாரோக்கியம், சுயமதிப்பு என்பவற்றில் வீழ்ச்சி காணப்படுவதை எமது வீடுகளிலேயே காண்கிறோம். சிறுபிள்ளைகளாக இருக்கும்போது குறிப்பிட்ட நேரத்துக்கு பெற்றோர் கொடுக்கும் உணவு வகைகளை உண்கிறார்கள். பெற்றோரும் இவர்களின் ஆரோக்கியத்திலும், மனநலத்திலும் ஈடுபாடு காட்டுகிறார்கள். 10-12 வயது வந்தவுடனேயே சிறுபிள்ளைத்தனம் ஓடி மறைந்துவிடுகிறது. அவர்கள் சுதந்திரமான போக்கு உடையவர்களாக மாறி விடுகின்றனர். உணவிலோ, ஆரோக்கியத்திலோ பெரிய ஈடுபாடு காட்டுவதில்லை.

பாடசாலை அடைவுகளின் காரணமாக இங்குள்ள பிள்ளைகள் மன அழுத்தம், பதற்றம், கவலை கொள்வது வருடம் முழுவதும் தொடர்ந்தபடி இருக்கிறது. பரீட்சைகளும் ஒப்படைகளும் வருடம் முழுவரும் நடைபெறுகின்றன. அவற்றின் கூட்டுத்தொகையே வருட முடிவில் அல்லது அரையாண்டு முடிவில் கிடைக்கும் புள்ளிகளாகும். இதற்கு பெற்றோரும் ஒரு காரணமாக அமைகிறார்கள். தங்கள் பிள்ளைகள் எல்லா விடயத்திலும் முதலாவதாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்கள். பல ஒப்படைகளை வகுப்பிலுள்ள 3, 4 மாணவர்கள் இணைந்து செய்ய வேண்டியுள்ளது. இவ்வாறு செய்யும்போது சில மாணவர்கள் ஒத்துழைக்க மாட்டார்கள். வெருட்டுவார்கள். இவை யாவும் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன.

கணினித் திரைகளின் முன்னால் - அதிலும் சமூக உறவுகளோடு செலவிடும் நேரம் மிகவும் கூடியுள்ளது என்பதை நாம் அன்றாடம் காண்கிறோம். இரண்டாம் நிலைப் பாடசாலையில் 38 வீதம் பெண்களும், 26 வீதம் ஆண்களும் 24 மணித்தியாலமும் சமூக வலைத்தளங்களைப் பாவிக்கிறார்கள். இதனை எவ்வாறு கட்டுப்படுத்துவதென்பது எவருக்கும் தெரியவில்லை. இந்நிலை மென்மேலும் மோசமடைவதையே பெரியோர் மத்தியில்கூடக் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றைவிட இரண்டாம் நிலைப் பாடசாலை மாணவர்களுக்கு பகுதி நேர வேலை, ஆண் - பெண் உறவுகள், நேரமின்மையையும், மன உளைச்சலையும் ஏற்படுத்துகின்றன. ஒத்த குழுக்களின் தாக்கம் இவர்களைப் பிழையான விடயங்களைச் செய்ய தூண்டுகிறது. மொத்தத்தில் இன்றைய இரண்டாம் பாடசாலை மாணவர்கள் மாத்திரமன்றி, மத்திய வகுப்பு பாடசாலை மாணவர்களுக்கும் பாடசாலை வாழ்க்கை கடினமாகவேயுள்ளது.

ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபை நடத்திய ஆய்வில் 583 பாடசாலைகள் பங்குபற்றின. இப்பொழுது கல்விச்சபை 16 உயர் பாடசாலைகளைத் தெரிவு செய்து, Growing Focus - New Project என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் இத்தகைய ஒரு மாற்றம் காணப்படுவதாகவும், பொருளாதார கூட்டுறவு மற்றும் அபிவிருத்தி நிறுவன அறிக்கையும் தொழில்நுட்பத்தில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் இப்பிரச்சனையைக் கண்டுள்ளதாகக் கூறுகிறது. அதிக சவால்களையும் பிரச்சனைகளையும் சந்திக்கும் மாணவர்கள் குடும்ப வருமானம் குறைந்தவர்களாக இருப்பதாக கல்விச்சபை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் 7-12 வகுப்புவரை மாணவர்கள் அதிக நேரத்தை சமூக வலைத்தளங்களில் செலவிடுவதுதான் இவ்வீழ்ச்சிக்குக் காரணமாக இருப்பதால் அவற்றின் உபயோகத்தை நிறுத்தினால் நல்லதா எனக் கேட்டபோது ரொறன்ரோ மாவட்ட கல்விச்சபை இயக்குனர் ஜோன் மொல்லி முற்றிலும் மறுப்புத் தெரிவித்துள்ளார். 'இன்று நாம் டிஜிட்டல் உலகில் வாழ்கிறோம். ஒரு வயதுப் பிள்ளைக்கும் இந்தக் கருவிகள் இன்று இன்றியமையாதவையாகிவிட்டன. உலகளாவிய ரீதியில் இதனைக் காண்கிறோம். ஆய்வில் பங்குபற்றிய பாடசாலைகள் தங்கள் பிரச்சனைகளை தனியாகக் கையாளுவார்கள். Focus Groups என்ற திட்டத்தின் கீழ் பங்குபற்றும் 16 பாடசாலை - களும் வெகுவிரைவில் இப்பிரச்சனைக்கு விடை தருவார்களென்று நம்புகிறார் ஜோன் மொல்லி. பொறுத்திருந்து பார்ப்போம்.●



இரா. சம்பந்தன்

# ஔவையார் கண்ட பொல்லாத பெண்களும் சொல்லாத வார்த்தையும்!

படித்த கிழவியாக இருந்தாலும் காலமெல்லாம் பசியோடு போராடும் நிலையிலேயே இருந்தாள் ஔவை. நீண்ட தூரங்களை நடந்தே கடந்தாள். சாதி பார்க்காமல் சகலரிடமும் வாங்கி உண்டாள். நாடோடி வாழ்க்கை வாழ்ந்த காரணத்தால் நிலையாக ஒரு வீடு இல்லை. ஆனாலும் அரசன் முதல் ஆண்டிவரை அனைவரிடமும் மிகுந்த செல்வாக்கு அவளுக்கு இருந்தது.

அப்படிப் பட்ட ஔவையின் வாழ்விலும் மிகவும் கசப்பான சம்பவங்கள் நடந்தேறி இருக்கின்றன என்பதற்கு அவளின் சில பாடல்களே சான்றாக இருக்கின்றன. ஒரு கவிஞனின் பாடலில் இருந்து அவன் பிரச்சனைகளை அறிந்து கொள்ள முடியும். ஔவையும் அதற்கு விதி விலக்கல்ல.

ஔவை தன் வாழ்வில் பல குடும்பங்களைச் சந்தித்திருக்கின்றாள். அதந்தக் குடும்பங்களின் ஆடவர்களைப் பார்த்து அவள் பரிதாபப்பட்டிருக்கின்றாள். மனையாளால் துன்புறுத்தப்பட்ட பல ஆண்களையும் அவர்களுக்கு அவள் சொன்ன புத்திமதிகளையும் அவள் பாடல்களில் பல இடத்தில் காணலாம்.

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்-மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றங் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். (வாக்குண்டாம்)

படிக்காதவன் செய்யும் தவறுக்கு படித்தவன் கோபத்தில் சொல்லும் வார்த்தையே இயமனாக வந்து விடும். தரும வழியில் நடக்காத மனிதருக்கு இறுதியில் அறமே கூற்றுவனாக வந்து அழித்து விடும். மென்மையான வாழை மரத்துக்கு அதன் குலையே இயமனாக நின்று கொல்கின்றது. இது போல ஒரு மனிதனுக்கு யார் இயமன் என்றால் குடும்பவாழ்வை உணர்ந்து நடக்காத மனைவிதான் என்று சொன்னாள் ஔவை. என்றோ அவள் சொன்னது பல வீடுகளில் இன்றும் பொருந்துகின்றது.

பெண்களின் குடும்பத்துக்கு ஒத்துவராத தன்மை பற்றிப் பாடின ஔவை சில பெண்களின் வாய்க்கொழுப்பையும் விட்டுவைக்கவில்லை. ஒருவனுக்கு வீட்டிலே நல்ல மனைவி இருப்பாளாக இருந்தால் அந்த வீட்டிலே இல்லாத பொருள் என்று ஒன்றும் இல்லாமல் அவளாலேயே வீடு நிறைந்து இருக்கும். மாறாக கடுமையான சொற்களைப் பேசி எல்லோரோடும் வாக்குவாதம் செய்யும் பெண் வந்து ஒரு வீட்டில் சேர்ந்து விட்டால் அப்புறம் அது வீடாக இருக்காது. புலி இருக்கின்ற குகையாக மாறிவிடும் என்றாள் அவள்.

இல்லா ளகத்திருக்க இல்லாத தொன்றில்லை
இல்லாளும் இல்லாளே யாமாயின்-இல்லாள்
வலிகிடந்த மாற்ற முரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும். (வாக்குண்டாம்)

மனைவி சரியில்லை. அப்போது என் செய்யலாம்? புத்திமதி சொல்லிச் சமரசம் செய்யலாமா என்றால் வேண்டாம் என்கின்றாள் ஔவை. குற்றமுள்ள பாட்டுக்கு நல்ல இசை அமைத்தாலும் அதனால் என்ன பிரயோசனம். ஒழுக்கம் தவறிக் கொண்ட உயர்ந்த குலத்தை விட வேறு குலமாக இருப்பது நல்லது. பிறர் குறை சொல்லும் வீரத்தோடு இருப்பதை விட தீராத நோயோடு கிடப்பதே நல்லது. அது போல கெட்ட பெயர் வருவதைப் பொருட்படுத்தாமல் நடக்கும் மனைவியோடு வாழ்வதை விட தனியாகப் பிரிந்து போய் வாழ்வதே நல்லது என்பது அவளின் கருத்தாகும்.

ஒழுக்குடைய பாட்டிற்கு இசைநன்று சாலும்
ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று-வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய் பழிக்கஞ்சாத்
தாரத்தின் நன்று தனி. (நல்வழி)

தனியாகப் பிரிந்து சென்று வாழ்வது என்றே முடிவாகிற்று. சரி எப்படிப் பிரிய வேண்டும்? பெற்றார் முன்னிலையிலா பெரியவர்கள் முன்னிலையிலா என்றால் ஔவை சொன்னாள் அது ஒன்றும் வேண்டாம். பெண்சாதி நல்லவளாக இருந்தால் என்ன பிரச்சனை என்றாலும் சமாளித்துக் கொண்டு வாழலாம். சரியில்லை என்றால் கதைச்சு ஒன்றும் ஆகப் போவதில்லை. யாருக்கும் சொல்லாமல் ஓடிப் போய் சன்னியாசி ஆகிவிடு என்றும் சொன்னாள் அவள்.

பத்தாவுக் கேற்ற பதிவிரதை உண்டானால்
எத்தாலும் கூடி வாழலாம் _ சற்றேனும்
ஏறுமா றாக இருப்பாளே யாமாகில்
கூறாமல் சந்நியாசம் கொள். (தனிப்பாடல்)

மேலே சொன்ன கருத்துகள் எல்லாம் ஔவை சொல்லக் கூடாத கருத்துகள். அவள் தவ மூதாட்டி. தெய்வங்களோடு நேரடியாகத் தொடர்பு வைத்திருந்தவள். செந்தமிழைப் பேசும் நாக்குப் பெற்றிருந்தவள். அவள் ஏன் இப்படி மோசமாகப் பெண்களைத் தன் பாடல்களிலே தாக்கினாள் என்றால் அதற்கும் காரணம் இருக்கின்றது.

தான் வாழ்ந்த சமுதாயத்திடம் இருந்து பொன்னை பட்டாடையை வாகன வசதியை அந்தக் கிழவி கேட்கவில்லை. கூழ் கொடுத்தாலும் சந்தோசமாக வாங்கிக் குடித்துவிட்டுப் போகும் ஏழைப் பெண் அவள். ஆனால் அவளைச் சில மனிதர்கள் போற்றி அன்போடு வீட்டுக்கு சாப்பிட அழைத்துச் சென்ற போது அவர்களின் வீட்டுப் பெண்கள் சினந்திருக்கின்றார்கள். கணவன்மாரோடு எரிந்து விழுந்திருக்கிறார்கள்.

கணவனை அரிசி புடைக்கும் முறத்தால் அடித்த பெண்ணை அந்த ஆச்சி கண்டு வேதனைப்பட்டிருக்கின்றாள். வேண்டா வெறுப்போடு தனக்கு உணவு படைத்த பெண்ணைக் கண்டு அழுதிருக்கின்றாள். இந்த உணவைப் பார்க்க எனக்கு கண்கள் கூசுகின்றனவே வெட்கத்தால் சாப்பிட கைகள் மறுக்கின்றனவே பசி வர மறுக்குதே ஐயோ என் எலும்பெல்லாம் பற்றி எரிகின்றதே அன்பில்லாத ஒருத்தியிடம் வாங்கிச் சாப்பிடும் நிலை வந்துவிட்டதே என்று புலம்பியிருக்கின்றாள் அவள்.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தைய்யையோ
அன்பிலாள் இட்ட அமுது. (தனிப்பாடல்)

இவையெல்லாம் சேர்ந்து பொல்லாத கோபமாக உருவெடுக்க சொல்லாத வார்த்தைகளைச் சொன்னாள் அந்தத் தாய்.



பொன்னையா விவேகானந்தன்

# மொழிக்கல்வியும் கல்வி வரையும்

43

## மாறுபாடுடைக் கற்பித்தல்

கடந்த மாதக் கட்டுரையில் குறிப்பிட்ட மாறுபாடுடைக் கல்வி குறித்துச் சற்று விரிவாக நோக்குவோம். இக்கல்வி முறையின் முதன்மை நோக்கம் அனைத்து மாணவர்களுக்கும் ஒத்த கல்வியை வழங்குவதாகும்.

வகுப்பறையில் சில மாணவர் மட்டும் கல்வியில் சிறந்து விளங்க, வேறு சிலர் பின்தங்கி விடுவது வழமையாகவே இருக்கின்றது. இவர்களை எளிதாக புத்திசாலி, முட்டாள் என்ற பிரிவுகளுக்குள் சமூகம் அடக்கி விடுகின்றது. ஆனால் இந்தக் கணிப்பும் புறக்கணிப்பும் தவறானது என நிறுவினர் ஆராய்ச்சியாளர்.

பள்ளியில் கல்வியில் சிறந்து விளங்கியோர் எல்லோருமே முன்னேற்றம் கண்டதில்லை. பின்தங்கி - யிருந்தோர் எல்லோருமே வாழ்வில் பின்னடைந்து போனதில்லை. எல்லோருக்கும் ஏதோவொரு ஆற்றல் இருக்கின்றது. ஆனால் வகுப்பறைக் கல்விமுறை சிலருடைய ஆற்றல் வெளிப்பாட்டுக்கு மட்டுமே உதவுகின்றது. ஏனையோருக்கு உதவவில்லை என்று கண்டறிந்தனர்.

ஆசிரியரையும் மாணவர்களுக்காக அரசு அல்லது நிறுவனம் திட்டமிட்ட பாடவரைபுகளும் ஆசிரியரை மையப்படுத்தியே கற்பிக்கப்பட்டன. இது ஆசிரியர் மையக்கல்வி எனப்பட்டது. இக்கல்விமுறையில் மாணவர்களின் விருப்பத்துக்கும் தேவைகளுக்கும் இடம் இருக்கவில்லை. ஆசிரியரின் கற்பித்தல் முறைகளுக்கு மாறான விருப்பங்களையும் தேவைகளையும் கொண்டிருந்த மாணவர்களால் ஆசிரியரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாதிருந்தது. இக்கற்பித்தல் முறையில் ஆசிரியரின் எதிர்பார்ப்புகளுக்கும் குறிப்பிட்ட மாண-வரின் தேவைகளுக்குமிடையே கணிசமான இடைவெளி இருந்தது. இவ்வாறான மாணவர்கள் பலரே கல்விக்குத் தகுதியற்றவர்கள் எனக் கருதப்பட்டனர்.

மாணவர் அனைவருக்கும் ஒத்த கல்வியை வழங்க வேண்டும் என்பதே கல்வியியல் அறம். வகுப்பறையில் ஒரு சாரார் கற்றல் திறன் குறைந்தவர்கள் என ஒதுக்கப்படுவது தவறானது என ஆய்வாளர் கருதினர். மாணவர்களை மையப்படுத்தி ஆய்வுகள் செய்தனர்.

இவ்வாறு ஆய்வு செய்தவர்களில் ஒருவரே Howard Gardner என்ற அறிஞர். இவர் வகுப்பறையில் உள்ள மாணவர்கள் அனைவரும் நுண்ணறிவு ஆற்றலால் வேறுபட்ட விருப்பங்களையும் தேவைகளையும் கொண்டிருக்கின்றனர். அவர்களின் விருப்பங்களையும் ஈடுபாடுகளையும் முன்னிலைப்படுத்தியே கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் என்று ஆய்வு முடிவுகளைச் சான்று காட்டி வலியுறுத்தினார்.

எடுத்துக்காட்டாக, தலைமைத்துவத்தில் விருப்பும் ஆற்றலும் கொண்ட மாணவர், தலைமைத்துவத் தன்மை கொண்ட கற்பித்தலின் வழியே ஆற்றலை வெளிப்படுத்துவர். இசையில் ஆற்றல் கொண்ட மாணவர் இசைவழிக் கற்பித்தல் வழியே உயர்ச்சி பெறுவர்.

இந்த ஆய்வின் வழியே மாணவர் மையக்கல்வி சிறப்புருக் கொண்டது. மாணவர்களின் விருப்பு, ஈடுபாடு, தேவை, ஆற்றல் என்பவற்றை முன்னிறுத்தியே கற்பிக்க வேண்டும் என்பதைப் பலரும் ஏற்றுக் கொண்டனர்.

இதன் வழியே மாறுபாடுடைக் கல்விமுறை மேன்மையுற்றது. கல்வியறிவில் ஏற்றத்தாழ்வு கொண்ட மாணவர்கள் ஒரு வகுப்பறையில் இருக்கும் நிலையில் இந்த மாறுபாடுடைக் கல்வி மிகுந்த பயனை விளைவிக்கின்றது. பின்னடைவில் இருக்கும் மாணவர்களை அவர்களின் விருப்பத்துக்கேற்ப, முன்னேற்றிவிடும் பல்வேறு வகையான கற்பித்தல் உத்திகளைக் கொண்டிருக்கின்றது மாறுபாடுடைக் கல்வி.

எடுத்துக்காட்டாக, ஒரு மதிலைக் கடந்து மறுபக்கம் செல்ல வேண்டும் என்பதுதான் இலக்கு எனில், ஆசிரியர் மையக்கல்வி மதிலுக்கு மேலால் ஏறிச்செல்வதை மட்டுமே கற்பித்துக் கொடுப்பதாக இருக்கும். இது உடல் வலுக் குறைந்தோருக்கும் குள்ளமான-வர்களுக்கும் பயந்த சுபாவம் கொண்டோருக்கும் சிரமமாக இருக்கும். இதில் மதிலில் ஏறிச் செல்ல வல்லோர் மட்டுமே வெற்றி பெறுவர்.

ஆனால் மாறுபாடுடைக் கல்வி இலக்கை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, மாணவர் ஒவ்வொருவரும் தமது ஆற்றலுக்கேற்ப, மதிலுக்கு மறுபக்கம் செல்லத் தூண்டுகின்றது. இதன் வழியே சிலர் பள்ளம் குடைந்து மதிலைக் கடப்பர். வேறு சிலர் மதிலைப் பாய்ந்து கடப்பர். இன்னும் சிலர் ஏணியைத் தேடி எடுத்து ஏறிக் கடப்பர். இன்னும் கொஞ்சப் பேர் குழுநிலையில் ஒருவர் தோள் மீது மற்றவர் ஏறிக் கடப்பர். சிலர் உடைத்தும் செல்வர்.

இதன்வழியே எல்லோரும் மதிலைக் கடந்து விடுவர். இதுவே மாறுபாடுடைக் கற்பித்தல் முறை. வகுப்பறையில் ஒரு பாடத்தைப் பயிலும் போது மாணவர் அவரவருக்கு விருப்பமான செய்முறைகளின் வழியே பாடத்தைப் பயில்வர். மாறுபாடுடைக் கல்வி மாணவரின் விருப்பங்களுக்கும் தேவைகளுக்கும் அமைய நிறைந்த வாய்ப்புகளைக் கொண்டிருக்கும்.

மாறுபாடுடைக்கல்வி நான்கு முதன்மையான தன்மைகளைக் கொண்டிருக்கும்.

**உள்ளடக்கம்** (Content): கற்பித்தலுக்குத் தெரிவு செய்யப்படும் பாட உள்ளடக்கமானது கற்கும் மாணவர்களின் கற்றல் இயல்புக்கு ஏற்ப கூட்டவும் குறைக்கவும் வல்லதாக இருக்கும். மாற்றமுடியாத உள்ளடக்கமாக அது இருக்கப் போவதில்லை.

**செயல்முறை (Process)**: கற்கும் போது மாணவர் முயற்சிக்கு ஏற்ப, குறைவாகவோ, அதிகமாகவோ உதவிகளையும் வளங்களையும் வழங்க உதவும். குழுவாகவோ, இணையராகவோ கூடிக் கற்க வழி செய்யும். கற்றுக்கொண்ட மாணவர்கள் ஏனையோருக்கு உதவுவர். மாணவர் பாடத்தைப் புரிந்து கொள்ளவதற்காக மேலும் மேலும் வாய்ப்புகள் வழங்கப்படும்.

**நிறைவில் விளைவு (Product)**: மாணவர் தாம் கற்றுக்கொண்டவற்றை வெளிப்படுத்தவல்ல வாய்ப்புகள் அனைத்தையும் கொண்டிருக்கும். தனியொருவராகவோ குழுவாகாவோ கற்றவற்றை வெளிப்படுத்தலாம். செயல்முறை, எழுத்து, வாசிப்பு, வரைபடம் என தமக்கு விருப்பமாக வழிகளில் தாம் கற்றவற்றைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்புகள் வழங்கப்படும்.

**கற்றல் சூழ்நிலை (Learning Environment)**: மாணவர் கற்கும் சூழ்நிலையானது கற்பித்தலுக்கும் பாடத்துக்கும் ஏற்ப, மாறுபட்டவாறிருக்கும். மாற்றியமைக்கப்பட்ட வகுப்பறை, அமைதியாக செயலாற்றும் இடம், கலந்துரையாடும் தன்மை, சுவர்களில் அவசியமான படங்கள், வரைபடங்கள், தொழில்நுட்ப துணைக்கருவிகள் என்பவற்றைக் கொண்டிருக்கும்.

ஆரம்பத்தில் கூறியதைப் போல, அனைத்து மாணவருக்கும் ஒத்த அளவில் கல்வியை வழங்குவதே ஆசிரியர் கடமை. அதற்குப் பெரிதும் உதவும் மாறுபாடுடைக் கற்பித்தல் முறையை ஆசிரியர்கள் புரிந்து கொள்வது மிக அவசியம்.●



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 61

பிறந்திருக்கும் 2019க்கான புத்தாண்டு வாழ்த்துகளோடு ஆரம்பிக்கிறேன். இவ்வாண்டு பனிக்காலம் மிகக் குளிரானதாக இருக்கும் என்று ஒரு முகப்புத்தகக் குறிப்பு கூறுகிறது. மத்திய அரசாங்கத்திற்கான தேர்தல் இவ்வாண்டு வருகிறதல்லவா - போட்டி கடுமையானதாக இருக்கும் என்று இன்னொரு முகப்புத்தகக் குறிப்புக் கூறுகிறது. இலங்கை அரசியல் குழப்பங்களால், அங்கிருப்போரின் வாழ்க்கைநிலை கடுமையானதாக இருக்கும் என வேறொரு குறிப்பு தெரிவிக்கிறது. என்ன வகையான சவால்கள் இருந்தாலும், யார் எதைச் சொன்னாலும், *‘எல்லாம் கடந்துபோகும். நல்லதே நடக்கும்’* என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டை வரவேற்போம்.

இனி, கடந்து போன டிசம்பரில் முகப்புத்தகத்தில் கண்டதைச் சொல்லுகிறேன். *‘ஆட்சியாளரைக் கொடியோர் ஆக்குவது எது என்று கேட்டேன்.. அதிகாரத்தின் பேராசை என்றது வரலாறு. ஆட்சியாளரைக் குருடர் ஆக்குவது எது என்று கேட்டேன்... அதிகாரத்தின் பேராசை என்றது வரலாறு. ஆட்சியாளரைக் கோமாளி ஆக்குவது எது என்று கேட்டேன்... அதிகாரத்தின் பேராசை என்றது வரலாறு... ஆட்சியாளரை அவமானப்படுத்துவது எது என்று கேட்டேன்... அதிகாரத்தின் பேராசை என்றது வரலாறு... ஆட்சியாளரை அகதியாக்குவது எது என்று கேட்டேன்... இறுதியாக வரலாறு சொன்னது: அதுவும் அதிகாரத்தின் பேராசை.’*

மேலேயிருப்பது பேராசிரியர் நுஃமான் அவர்களின் கவிதை வரிகள். கடந்த மாதம் முகப்புத்தகத்தில் இதை யாரோ பதிந்திருந்தார்கள். இந்த வரிகளுக்கு ஒத்து வருவதுபோலத்தான் இலங்கையின் அரசியல்போக்கு சென்ற டிசம்பரில் சென்று கொண்டிருந்ததை நாம் அனைவரும் அறிவோம். ஆம். ஸ்ரீலங்காவின் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான பிணக்கு இழுபறி தொடர்ந்த நிலையில் நீதிமன்ற உத்தரவின்படி மகிந்த மீண்டும் பதவியிழந்தாரல்லவா.. அதுகுறித்து பல பதிவுகள் தொடர்ச்சியாக இடப்பட்டுக் கொண்டிருந்தன.

*‘கொமன்வெல்த் வரலாற்றில் முதன்முறையாக பிரதமர் ஒருவர் செயல்படுவதற்கு நீதிமன்றம் ஒன்று இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.’* என்று ஒருவர் நிலைமையை வர்ணித்திருந்தார். *‘பணம் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை வாங்கும் நிலைமை இப்போது இலங்கையிலும் ஆரம்பித்துவிட்டது’* என்று வருந்தினார் ஒருவர். *‘5-50 கோடி பேரம் என்று கூவும் யாருமே ஏன் பொலிசாரிடம் புகார் கொடுக்கவில்லை?’* என்று சந்தேகம் கேட்டார் வேறொருவர். இவை ஒருபுறமிருக்க, *‘ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தை முடங்கவிடாது தடுத்த நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தமிழ் அரசியல் தலைவர்களே காரணம்’* என்று சிங்களப் பகுதிகளில் எழுந்த இனவாத கூச்சலை நம்மவர்கள் பெருமை பொங்க திரும்ப திரும்பப் பகிர்ந்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

நீதிமன்றத் தீர்ப்பு வந்ததிலிருந்து ஸ்ரீலங்கா ஜனாதிபதி குறித்து கோபமாக அல்லது கேலி செய்து பலரும் பல்வேறு பதிவுகளை இட்டுக் கொண்டிருந்தார்கள். நகைச்சுவைத் துணுக்குகளும் பரவ விடப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றில் ஒன்று இது: *மைத்திரி ஒருமுறை ஒரு பைத்தியக்கார விடுதியைப் பார்வையிடச் சென்றார். மைத்திரி வந்த போது ஒரே நேரத்தில் அனைவரும் கையுயர்த்தி அவருக்கு வணக்கம் சொன்னார்கள். ஒரு நபர் மட்டும் வணக்கம் சொல்லாமல் நிற்பதைப் பார்த்து மைத்திரி எரிச்சலுற்றார். ‘ஏன் வணக்கம் சொல்லவில்லை?’ என உறுமினார். நடுங்கிய அந்த நபர் அலறினார் ‘மத்தயா.. நான் பைத்தியமில்லை...!’*

டிசம்பர் மாத முதல் இரு வாரங்களில் நம்மவர்களின் முகப்புத்தகத்தை கவனித்த ஒருவர் *‘பலரின் கவனம் அவர்களைப் பற்றி மட்டுமே அலசி ஆராய்ந்து கொண்டிருப்பது தெரிகிறது’* புலம்பிவிட்டார். அந்த அளவிற்கு நம்மவர்களின் கவனத்தை ஸ்ரீலங்கா அரசியல் விவகாரம் ஈர்த்துக் கொண்டிருந்தது. இருந்தபோதும், நவம்பர் மாத மாவீரர் நிகழ்வுகளின் தாக்கத்தால் டிசம்பர் மாதமும் முன்னாள் போராளிகள் குறித்த கரிசனம் நிறைந்த பதிவுகள் தொடர்ந்து கொண்டிருந்தன என்பதையும் மறப்பதற்கில்லை. தாயகத்திற்கு உதவிகள் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கை புதிய கோணத்தில் வீடியோக்களாக வெளியிடப்பட்டன. முன்னாள் போராளிகளின் தற்போதைய நிலை, அவர்களுக்கு உதவி செய்யவேண்டியதன் அவசியம் என்பன குறித்தும் பேசிய அந்த வீடியோ பதிவுகள் தொடர்ச்சியாக பலராலும் பகிரப்பட்டுக் கொண்டு வந்தமையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

அதுபோக, ஈழத் தமிழ் உலகின் மாபெரும் கவிஞர்களில் ஒருவரான புதுவை இரத்தினதுரை என்ற ஆளுமையின் 70வது பிறந்த நாள் *(03-12-2018)* வந்ததை நினைவில் வைத்து ஒரிருவர் மட்டுமே பதிவுகள் இட்டிருந்தார்கள். *‘ஈழத்து கவி உலகின் கொம்பர்களாக தம்மைச் சொல்லிக் கொள்ளும் எவருமே புதுவை இரத்தினதுரை என்ற கவிஞன் பற்றி ஒரு சிறு குறிப்பெழுதக் கூட கால அவகாசம் இல்லாதது போல இருக்கிறார்கள். அவர்கள் அப்படியே இருக்கட்டும். அவர்கள் பொத்தி மறைப்பதை காலம் ஒரு நாள் வெளிச்சமிடும்.’* என்று பொருமினார் ஒருவர். *‘வீட்டு நாய் விறாந்தையில் ஏற முடியும் என்பதற்காக நான் சுதந்திரமானவன் என்று நாய் எப்படிக் கூறமுடியும்?’* என்ற புதுவையின் வரிகளால் சமகாலத்தை விமர்சித்தார் வேறொருவர். *‘நன்றி மறந்த தமிழ் இனம்’* என்று புதுவையின் அபிமானி ஒருவர் கோபித்துக் கொண்டார். *‘எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்.’* என்ற திருக்குறளால் ஈழத்தமிழர்களை விமர்சித்தார் வேறொருவர். இவ்வகைப் பதிவுகள் தொடர்ந்து கொண்டிருக்க, பிறிதொரு பதிவில் திருக்குறள் குறித்தும் வள்ளுவர் குறித்தும் நான் கண்டதை இவ்விடத்தில் தருவது பொருத்தமாக இருக்கும். அப்பகுதியை கீழே பார்க்க:

*‘விலங்கு இனத்திலே நன்றிக்கு இலக்கணமாகக் கொள்ளப்படுவது நாய்...! ஆனால் எந்த இடத்திலும் நாய் என்ற வார்த்தை திருக்குறளில் இல்லை...! நன்றியைப் பற்றிப் பேசியிருக்கிறார்! அங்கே நாயைக் கொண்டுவந்தால் தவறு இருக்காது. ஆனால் பயன்படுத்தவில்லை! அது போல இழி மக்களைப் பற்றிக் கயவர் தீயார் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார். அங்கும் நாய் கொண்டுவரப்படவில்லை! திருவள்ளுவர் கான முயல் எய்த அம்பு என்று முயலைக் கையாளுவார்! ஆவுக்கு நீரென்று இரப்பினும் என்று பசுவைப் பயன்படுத்துவார்! புலி தாக்குறின் என்று புலியைப் பயன்படுத்துவார்! பொருதகர் என்று ஆட்டுக் கடாவைப் பற்றிப் பேசுவார் பரியது கூர்ங்கோடது என்று யானை பற்றிப் பேசுவார்! ஒலித்தக்கால் என்னாம் எலிப்பகை என்று எலியைக் குறளுக்கு கொண்டு வருவார்! மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமான் என்று மானைத் தொட்டுக் காட்டுவார்! மடல்மா என்று குதிரையின் குறிப்பும் வரும்! ஆனால் எந்த இடத்திலும் நாய் என்ற வார்த்தை திருக்குறளில் இல்லை..!’*

ஒருவேளை, நாயின் தேவை இல்லாமல் அந்தக் காலத்தில் மனிதனே நன்றியுடையவனாக இருந்திருக்கலாம்.●

# கனடா கந்தசுவாமி கோவில் திருக்குடமுழுக்கு





கனடாவில் ஸ்காபரோ நகரில் 733 பேர்ச்மவுன்ட் வீதியில் எழுந்தருளியிருக்கும் கனடா கந்தசுவாமி கோவில் திருக்குட திருமஞ்சன பெரும் சாந்தி (மகா கும்பாபிசேகம்) விழா கடந்த மாதம் 14ம் திகதி பக்திபூர்வமாக ஆயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது. இதன்போதான சில அருட்காட்சிகளை இங்கு காணலாம். தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிசேகம் நடைபெற்று இறுதியில் பூர்த்தி நிகழ்வோடு நிறைவுபெறும். ஆலயத் தொலைபேசி இலக்கம்: 416 438 1882.





## இமையத்திற்கு இலக்கியத் தோட்ட ‘இயல் விருது’

தமிழ் இலக்கியத் தோட்டம், 2018-ஆம் ஆண்டிற்கான வாழ்நாள் சாதனையாளர் இயல் விருதை, 25 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இலக்கிய உலகில் தொடர்ந்து இயங்கி வரும் எழுத்தாளர் இமையம் அவர்களுக்கு வழங்குவதில் பெருமை அடைகிறது. எழுத்தாளர் இமையம் தமிழகத்தின் கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர். தற்போது விருத்தாசலத்தில் ஆசிரியராக பணிபுரிந்து வரும் வெ. அண்ணாமலை என்ற இயற்பெயர் கொண்ட இவர் எளிமையான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். தமிழ்நாட்டு கிராமங்களில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களே இவர் கதைகளின் பாத்திரங்கள். அவர்களின் வாழ்க்கை, கலாசாரம், சாதி, வகுப்பு, பால் பேதங்களால் அவர்கள் படும் அவலம் போன்றவற்றை அவர்களின் மொழியிலேயே கதைகளாக வடித்திருக்கிறார். “தமிழில் இதற்கு இணையாக நாவல் இல்லை” என்று அவரது முதல் நாவலான “கோவேறுக் கழுதைகள்” நூலை தமிழின் முன்னோடி எழுத்தாளர் திரு. சுந்தர ராமசாமி விமர்சித்திருக்கிறார். இந்நாவல் **Beasts of Burden** என ஆங்கிலத்தில் வெளியாகியுள்ளது. மனித மனங்களின் பல்வேறுபட்ட மனநிலைகளை தன் ஒவ்வொரு புனைவிலும் காத்திரமாக பதிவுசெய்துவரும் இமையம் தமிழ் படைப்பாளிகளில் தவிர்க்க முடியாத ஆளுமையாகவும், சாதி ஆதிக்க மனோபாவத்தை தொடர்ந்து விமர்சித்து வரும் ஒருவராகவும் விளங்குகிறார். “இலக்கியப் படைப்பு என்பது சமூக விமர்சனம். சமூக இழிவுகளாக இருப்பவற்றை விமர்சனம் செய்வதுதான் ஒரு நிஜமான கலைஞனின், கலைப்படைப்பின் வேலை. சமூக இழிவுகளை சுட்டிக்காட்ட, அடையாளப்படுத்தவே எழுதுகிறேன். நான் சரியாகவும், முழுமையாகவும் சமூக இழிவுகளை பதிவு செய்திருக்கிறேனா என்பதில்தான் என்னுடைய கதைகளுக்கான உயிர் இருக்கிறது. எழுத்தின் அடிப்படையே அதுதான்.” இவ்வாறு இமையம் சொல்கிறார். விருது வழங்கும் விழா ரொறன்ரோவில் எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறும்.



## கவனயீன சாரதிகளுக்கு இந்த மாதத்திலிருந்து பல மடங்கு தண்டனை

கவனயீனமாகவும், தொலைபேசியில் குறுந்தகவல்களை அனுப்பியவாறும் வாகனத்தை ஓட்டும் சாரதிகளுக்கு ஒன்ராறியோ மாகாண அரசு இந்த மாதம் 1ம் திகதியிலிருந்து தண்டனையைப் பல மடங்காக அதிகரித்துள்ளது. முதற் தடவை குற்றத்துக்கு 1,000 டாலர்கள்வரை தண்டமும், மூன்று புள்ளிகள் வெட்டும், மூன்று நாட்களுக்கு லைசென்ஸ் தடையும் வழங்கப்படும். இரண்டாம் தடவை குற்றத்துக்கு 2,000 டாலர்கள்வரை தண்டமும், ஆறு புள்ளிகள் வெட்டும், 7 நாட்களுக்கு லைசென்ஸ் தடையும் வழங்கப்படும். மூன்றாம் தடவை குற்றத்துக்கு 3,000 டாலர்கள்வரை தண்டமும், ஆறு புள்ளிகள் வெட்டும், 30 நாட்களுக்கு லைசென்ஸ் தடையும் வழங்கப்படும். கனடாவில் ஒன்ராறியோவிலேயே அதிகூடிய தண்டனை வழங்கப்படுகிறது.

# ரொறன்ரோ பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கு ‘முற்றத்து மல்லிகை’ மூலம் 32,000 டாலர்கள்






இசையரங்கத்தின் முற்றத்து மல்லிகை இசை நிகழ்வு கடந்த மாதம் 1ம் திகதி ரொறன்ரோவில் நிகழ்ந்தேறியது. நிகழ்வின் முக்கிய அம்சம், இது கனடிய கலைஞர்களால் முற்று முழுதாக உருவாக்கப்பட்டது என்பது. பாடல் இயற்றியது, இசையமைத்தது, பாடியது மற்றும் இசைக்கருவிகளை மீட்டியது என யாவுமே கனடிய கலைஞர்கள்தான். கலை நிகழ்ச்சி மூலம் திரட்டிய நிதி ரொறன்ரோ பல்கலைக்கழக செயலாற்று இயக்குநர் ஜோர்ஜெட் சினாட்டி அவர்களிடம் மேடையிலே கையளிக்கப்பட்டது. அன்றைய நிகழ்ச்சி மூலம் சேர்ந்த தொகையான 32,000 டாலர்களை திரு







வை. சொர்ணலிங்கம் மேடையிலே மாதிரிக் காசோலையாக வழங்கினார்.

ஜோர்ஜெட் சினாட்டி பேசும்போது இசைக்குழுவினர் வழங்கிய அற்புதமான இசையால் தான் கவரப்பட்டதாகவும், அவர்களால் திரட்டப்படும் நிதி ரொறன்ரோ தமிழ் இருக்கைக்கு அளிக்கப்படுவது தனக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் கூறினார். “ஒரு மொழி பேசும் குழுவினரால் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் அமைக்கப்படும் முதல் இருக்கை என்பது பெருமைப்பட வேண்டிய ஒன்று. இந்த இருக்கை வேறு மொழி இருக்கைகளுக்கு முன்மாதிரியாக அமையும். தமிழ் மொழியின் பாரம்பரியத்துக்கும் தொன்மைக்கும் அதன் மேன்மைக்கும் சாட்சியாக இது அமைந்து என்றென்றும் நிலைபெறும்” எனவும் கூறிய இவர் இசைக்குழுவினரின் முயற்சியை மேலும் பாராட்டினார்.

நிகழ்ச்சியில் நன்றியுரையாற்றிய சொர்ணலிங்கம் இசையைப் பற்றியும் தமிழிசையின் பெருமையைப் பற்றியும் விளக்கினார். கனடாவிலே மிகவும் திறமையான இசைக் கலைஞர்களும் பாடகர்களும் இருப்பதாகவும், பல தரமான பாடல்கள் இசைத்தட்டாக வெளியிடப்பட்டிருப்பதாகவும் கூறினார். ஆனால் 200க்கு மேற்பட்ட பாடல்கள் கனடா-வில் உருவாக்கப்பட்டிருப்பது பலருக்கு தெரியாது என்று தன் கவலையை வெளியிட்டார். அத்துடன் இந்நிகழ் -வுடன் சம்பந்தப்படாத வகையில் இங்குள்ள வானொலி ஊடகங்களுக்கு சில ‘ஆலோசனை’களையும் இவர் வழங்கினார். தனிப்பட்ட வகையில் இங்குள்ள வானொலி நிலையங்க-ளுக்கு விடுக்கப்பட வேண்டிய வேண்டுகோளை, உன்னதமான தமிழ் இருக்கைக்கான முற்றத்து மல்லிகை நிகழ்வில், பிற சமூகப் பிரதிநிதி முன்னிலையில் குறிப்பிட்டதை திரு. சொர்ணலிங்கம் தவிர்த்திருக்கலாமென்பது பலரின் கருத்து.

மேடையில் பல சமூகப் பிரதிநிதிகள் தங்கள் உறுதிப்பத்திரங்களையும், காசோலைகளையும் நேரடியாக ஜோர்ஜெட் சினாட்டியிடம் நன்கொடையாக வழங்கினார்கள். ரொறன்ரோ தமிழ் மக்களிடையே நடந்த முக்கியமான நிதிசேர் இசைநிகழ்வாக இது அமைந்தது. முற்றத்து மல்லிகை நிகழ்ச்சியில் பங்கேற்ற கலைஞர்களுக்கு ‘தமிழர் தகவலின்’ வாழ்த்துகள். தொடரட்டும் சமூகம்சார் கலைப்பணிகள்! நிகழ்வின் சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.

## வீடு விற்பனையில் தொடர்ச்சியான உயர் விருதுகள்



கனடாவில் வீடு விற்பனையில் கடந்த பல வருடங்களாக முன்னணியில் திகழும் திரு. ராஜ். நடராஜா இங்குள்ள ReMax Excel நிறுவனத்தின் கடந்த ஆண்டுக்கான விருது விழாவில் தொடர்ந்து இத்துறைக்கான உயர் விருதினைப் பெற்றுள்ளார். 2007ம் ஆண்டு HomeLife Future Reality நிறுவ-னத்தில் வீடு விற்பனை முகவராக இணைந்து, 2013, 2014, 2015 ஆகிய மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக முதல்நிலை (Top Producer) விருதை தமதாக்கிக் கொண்டவர் இவர். தமிழர் தகவலின் வெள்ளி விழா ஆண்டில் (2016) தொழில்துறை முன்னோடி விருதையும் தங்கப்-பதக்கத்தையும் பெற்ற திரு. ராஜ் நடராஜா தொடர்ந்து முன்னணி வகித்து வருவது குறிப்பிடத்தக்கது.





# சுகன் சிவராஜாவின் Royal LePage Ignite நிறுவன முதலாவது ஆண்டு கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

சுகன் சிவராஜா தனது சகோதரர்களுடன் இணைந்து நடத்தும் **Royal LePage Ignite** வீடு/சொத்து விற்பனை நிறுவனத்தின் முதலாவது ஆண்டு கிறிஸ்மஸ் கொண்டாட்டம் கடந்த மாதம் 8ம் திகதி கென்னடி விருந்தினர் உபசார மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது. மேற்படி நிறுவனத்தின் தலைமை நிலைய உயர் அதிகாரிகள் வைபவத்தில் பங்குபற்றி சிறப்புரையாற்றினர். இந்நிறுவனத்தின் விற்பனைப் பிரதிநி-திகளின் செவ்விகள் திரையில் ஒளிபரப்பப்பட்டது முதன்மையானதாக அமைந்தது. சில கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றது. மேற்படி நிறுவனத்தின் சார்பில் பொதுப்பணிக்கான நன்கொடைக்குரிய காசோலையும் மேடையில் வைத்து வழங்கப்பட்டது.













## ரொறன்ரோ - 2018 96 கொலைகள்

ரொறன்ரோ நகரில் 2018ம் ஆண்டில் 96 கொலைகள் இடம்பெற்றுள்ளன. கடந்த 15 ஆண்டுகளில் அதிகூடிய கொலைகள் கடந்த ஆண்டிலேயே இடம்பெற்றுள்ளது. 1991ல் 90 கொலைகள் இடம்பெற்றன. கடந்த வருட 96 கொலைகளில் 51க்கு துப்பாக்கிகள் பயன்படுத்தப்-பட்டுள்ளன.

# இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் - கனடா




## ஆறாவதாண்டு ‘வர்த்தக தீபம்’ விருது விழா

கனடாவில் இயங்கும் இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின் ஆறாவதாண்டு ‘வர்த்தக தீபம்’ விழா கடந்த மாதம் 26ம் திகதி ஸ்காபரோ கொன்வென்சன்ட் மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. செ. கிருஷ்ண-கோபால் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக மேற்படி மண்டப உரிமையாளரும், வர்த்தகப் பிரமுகருமான திரு. மயில்வாகனம் ஜெகநாதன் பங்குபற்றினார். சிறப்பு விருந்தினராக இலங்கையில் பாடசாலை அதிபராகக் கடமையாற்றிய திரு. சண்முகலிங்கம் கலந்து கொண்டார். இவ்விழாவில் இலங்கையில் வர்த்தகத்துறையில் சிறந்து விளங்கிய ஆறு பேரும், கனடாவில் வர்த்தகம் புரியும் ஆறு பிரமுகர்-களும் விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். சங்க உபதலைவர் திரு. கேதா நடராஜா, செயலாளர் திரு. சோம. சச்சிதானந்தம், பொருளாளர் திரு. ராதா கிருஷ்ணசாமி ஆகியோர் தலைமையிலான குழு விழா ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தது. ஒன்ராறியோ மாகாண சபை உறுப்பினர் திரு. விஜே. தணிகாசலம் வாழ்த்துரை வழங்கி மாகாண அரசின் வாழ்த்து மடலை சங்கத் தலைவரிடம் கையளித்தார். (ஒளிப்படங்கள்: கே. ரகு)









# HomeLife/Future Realty Inc.
## 16வது ஆண்டு விருது விழாவும் ஒன்றுகூடலும்


Top Producer - Krish Sivapatham



Champagne Opening

செல்வா வெற்றிவேல் அவர்களின் நிர்வாகத்திலான **HomeLife Future Realty Inc., Brokerage** நிறுவனத்தின் 16வது ஆண்டு விருது விழாவும் ஒன்றுகூடலும் கடந்த மாதம் 23ம் திகதி மார்க்கம் 'இவென்ற்' அரங்கில் நடைபெற்றது. மேற்படி நிறுவனத்தின் தலைமை ஸ்தாபகர் திரு. அன்ட்ரூஸ் முக்கிய விருந்தினராக இதில் பங்குபற்றி விருதுகளை வழங்கினார். வீடு விற்பனைத் துறையில் நீண்டகால அனுபவம் பெற்ற திரு. கிறிஸ் சிவபாதம் **Top Producer** விருதைப் பெற்றார். **Hall of Fame** விருதை மற்றொரு முன்னணி முகவரான சங்கர் மாணிக்கம் பெற்றார். 500க்கும் அதிகமான விற்பனை முகவர்களைக் கொண்ட இந்நிறுவனத்தின் சார்பில் ஏஜக்ஸ்-பிக்கரிங் வைத்தியசாலைக்கு நிதியுதவிக் காசோலை இங்கு கையளிக்கப்பட்டது.


Opening Speech


Hall of Fame- Shankar Manickam


Top Team
























# 28வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடு
## 28வது ஆண்டு விருது விழா
## 29வது ஆண்டு ஆரம்ப விழா

தமிழர் தகவலின் 28வது ஆண்டு பூர்த்தி மலர் வெளியீடு, 28வது ஆண்டு விருது வழங்கல் மற்றும் 29வது ஆண்டு ஆரம்பம் ஆகியவை இணைந்த முக்கூட்டு விழா அடுத்த மாதம் (பெப்ரவரி) நடுப்பகுதியில் வழமைபோல இடம்பெறும்.

ஆண்டு மலரில் அறுபதுக்கு மேற்பட்டவர்களின் படைப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் ஒன்பது கட்டுரைகள் இந்நாட்டில் வாழும் எமது இளையோரின் ஆக்கங்கள். கனடா மட்டுமன்றி அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இலங்கை மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வசிக்கும் பல பிரமுகர்களின் ஆக்கங்கள் மலரில் இடம்பெற்றுள்ளன.

மலர் வெளியீட்டுடன் இணைந்ததாக விருதுகள் வழங்கல் இடம்பெறும். வாழ்நாள் சாதனையாளர் விருதுடன் இலக்கியத்துறை, கலைத்துறை, தமிழ்த்துறை, சமூகப்பணி, பொதுப்பணி, பன்முகப்பணி ஆகியவற்றோடு வணிக முன்னோடி, சாதனை இளையோர் என மொத்தம் எண்மர் இவ்விழாவில் விருதுகளுடன் தங்கப்பதக்கம் சூட்டி மதிப்பளிக்கப்படவுள்ளனர்.

விழாவுக்கான அழைப்பிதழ்கள் உரியவர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு இந்த மாதம் (ஜனவரி) 31ம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படும். அழைக்கப்படுபவர்கள் மட்டுமே இவ்விழாவில் பங்குபற்ற முடியும். மேலதிக விபரங்களைப் பெற 416 920 9250 இலக்கத்தில் செய்தியைப் பதிவு செய்யவும். அல்லது **tamilsinfo@sympatico.ca** மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளலாம்.



# 44லிருந்து 25ஆகக் குறைக்கப்பட்ட ரொறன்ரோ நகரசபை உறுப்பினர்கள் முதல்வருடன்



ஏற்கனவே 44 உறுப்பினர்களாகவிருந்த ரொறன்ரோ நகரசபையின் எண்ணிக்கையை 47ஆக அதிகரிக்க சபை நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்ட வேளையில், ஒன்ராறியோவின் டக் ஃபோர்டின் தலைமையிலான கன்சர்வேடிவ் அரசு அதிரடியாக இதனை 25 ஆக குறைத்தது. இதனால் இரண்டு வட்டாரங்கள் பல ஒன்றாக இணைக்கப்பட்டன. இதன் காரணமாக இந்த வட்டாரங்களில் ஏற்கனவே உறுப்பினர்களாக இருந்தவர்கள் தமக்குள் மோதிக் கொண்டதால் 11 பேர் தோல்வியடைந்தனர். புதிதாக ஐந்து உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். தற்போதைய 25 உறுப்பினர்களில் எண்மர் பெண்கள். புதிய உறுப்பினர்கள் நகர முதல்வர் ஜோன் ரோறியுடன் கூட்டாக எடுத்த உத்தியோகபூர்வ ஒளிப்படம் இங்கு பிரசுரமாகியுள்ளது. (டொன்வலி வடக்கு உறுப்பினர் சேர்லி கரோல் இதில் சமுகமளிக்கவில்லை.)

HOMELIFE/CHAMPIONS REALTY INC., BROKERAGE*

*INDEPENDENTLY OWNED & OPERATED

WANTED FULL TIME / PART TIME

REALTORS / MORTGAGE BROKERS

90 / 10 SPLIT OR FLAT FEE

2ND LOCATION OPENING IN MILTON



HOMELIFE

HIGHER STANDARDS

MORTGAGE ALLIANCE

Access Inc.

LIC 11404 *INDEPENDENTLY OWNED & OPERATED


UTAYAN PONNUTHURAI


BROKER OF RECORD


Bsc (Hons)

DIRECT: 416 505 2120

OFFICE : 416 281 8090


MEDCENTRE CONNECT
Group of Companies
SYNCHRONIZING HEALTH SECTORS
MEDCENTRE CONNECT Health Care
MEDCENTRE CONNECT Facility Development
MEDCENTRE CONNECT Business Development
MEDCENTRE CONNECT Home Care
MEDCENTRE CONNECT Health Education
MEDCENTRE CONNECT Pharmaceutical
MEDCENTRE CONNECT Human Resource
MEDCENTRE CONNECT Insurance
MEDCENTRE CONNECT Medical Equipment & Supplies
416-297-9999 | www.medcentreconnect.com


SECURITY must be
your top PRIORITY
Get Insurance for your own SECURITY...
RRSP & RESP
SUPER VISAS
NON-MEDICAL INSURANCE
CRITICAL ILLNESS
DISABILITY INSURANCE
AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
125 Topflight Dr, 2nd floor, Mississauga ON. L5S 1Y1
647 401 5800 / 416 439 2800


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
Providing Peaceful Final Arrangements
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
Funeral Director
416 993 0826
Chapel Ridge
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது


நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
மார்க்கம் & ஸ்ரீல்ஸ்
Tel: 647-702-2159
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலையில் வாங்கப்படும்.
தங்க நகை அடவு சேவை குறைந்த வட்டி வீதம்
"$200 இலவசம்"
புதிய தங்கநகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்
6055 Steeles Ave E Unit C102, Scarborough, ON., M1X 0A7
Telephone: 647-702-2159 / 647-947-2864
NewRanganasJewellery
newranganasjewelhouse.com


OIL CHANGE SPECIAL $19.95
+ Tax & Disposal Fees
Semi-Synthetic Oil Change includes:
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
2nd Location
GRAND OPENING
MY MECHANIC
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca







# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 8:00 / M | அறுகம் புல் | $ 5:00 / Bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 3:00 / M | வில்வம் இலை | $ 5:00 / Bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 8:00 / M | வேப்பிலை | $ 5:00 / Bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0:30/Each | Marukhalundu /Maru | $ 5:00 / Bag |
| மல்லிகை மலர்கள் | $ 5:00 / Bag | மாவிலை | $ 10 Per1:00 |
| சம்பாகினி மலர்கள் | $ 5:00 / Bag | வெற்றிலை | $ 10 Per1:00 |
| அரலி மலர்கள் | $ 5:00 / Bag | வாழை இலை | $ 1:25 / Each |
| தாமரை மலர்கள் | $ 1:25 / Each | துளசி இலை | $ 3:00 / Bag |

Fancy Florist

SABESAN'S Choice

We design and build your dream homes



## Additions and Custom build homes





"நீங்கள் விரும்பும் இல்லம் அமைத்திட"

**சபேசன்**

விருதுகள் பெற்ற நிபுணர்

**416 605 1990**

**Custom made**
**Solid Wood Kitchen Cabinets Flooring Granite counter-tops...**



Financing available *OAC

## ஊர்கோலம்



எஸ். ராஜ்மோகன்

# பணிலமாடம் 50

புதுவருட தினத்தில் எடுத்த தீர்மானங்களை நிறைவேற்ற முனைந்திருக்கும் அனைவருக்கும் வாழ்த்துகள்!

முன்னேற்றத்தையும், புத்துணர்ச்சியையும், வெற்றியையும் கொடுத்துவரும் புதுவருட தீர்மானங்கள் மனிதர்களின் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானவை என்பது விஞ்ஞான ரீதியில் நிறுவப்பட்ட ஒரு விடயமாகும். இதனை 'ஒரு குறிக்கோளை அடையாளப்ப - டுத்துவது அல்லது அடைய முனைவது' என்ற விஞ்ஞானக் கோட்பாட்டின் கீழ் கொண்டுவர முடியும். உலகளாவிய ரீதியில், புதுவருட தீர்மானங்கள் தனி மனிதனின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்களையும், வெற்றிகளையும், வளர்ச்சிகளையும் கொடுத்து சமுதாய மேம்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவருகின்றது.

புதுவருட தீர்மானங்களும், அதை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளும் அவசியமானவை என்பதை அடுத்த வருடம் பிறப்பதற்கு முன்னர் நாம் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் நாம் எடுக்கும் புதுவருட தீர்மானங்கள் எப்பொழுதும் பெரிதாகவும், எம்மால் அடையக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதில் கவனம் தேவை.

கடந்த கால வரலாறுகள் எப்போதும் ஒரே நேர்கோட்டில் பயணிப்பது போன்ற தோற்ற முடையவை. இதனால், இதுவரை நடந்த விடயங்கள் எதுவும் மீண்டும் நடக்கப் போவதில்லை என்றே எமக்கு எண்ணத் தோன்றுகின்றது! ஆனால், நடந்தவைகள் - தான் மீண்டும், மீண்டும் நடக்கிறது என்பதை எம்மால் இலகுவில் புரிந்துகொள்ள முடிவதில்லை! கால நீரோட்டத்தில் நடப்பவைகளின் வடிவங்களில் மாற்றங்கள் ஏற்பட்டு, அவை புதிதாக எமக்குத் தோன்று- கின்றனவே தவிர, அதன் அடிப்படையில் மாற்றங்கள் இருப்பதில்லை. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக கடந்த நவம்பரில் இடம்பெற்ற 29வது மாவீரர்களின் வீரவணக்க எழுச்சி நிகழ்வுகளைக் குறிப்பிடலாம்.

இனத்தின் மீதும், மொழியின் மீதும், சூழலின் மீதும் கொண்ட அன்பும், கரிசனமும் எமது சகாப்தத்துடன் நின்று விடப்போவதில்லை என்பதை மீண்டும் எமக்கு நிறுவிச்சென்றனர் எமது இளைய சமுதாயத்தினர். திட்டமிட்டு அழிக்கப்பட்ட எமது வரலாறுகளை மீள்கட்டமைப்புச் செய்வதற்கான சகல தகைமைகளையும் கொண்டுள்ள இவர்கள், சரித்திர ஆதாரங்களின் உறுதியான தோற்றப்பாடுகளின் மேல் ஆழமாகக் கால்பதித்து எம்மிடம் நம்பிக்கை விதை- களை விதைத்துச் செல்கின்றார்கள். உலகளாவிய ரீதியில் பெருமையுடன் நடை- பெற்று முடிந்த மாவீரர் வீரவணக்க எழுச்சி நிகழ்வுகளை உறுதியான தமிழ் இனத்தின் எதிர்கால இருப்புகளாகக் கொள்ளமுடியும்.

எங்களையும், எங்களைச் சார்ந்தோரையும், எமது சூழலையும் புரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு தீர்மானங்களை நாம் எடுக்கவேண்டும். எமக்குப் பொருத்தமான வாழ்வியல் அனுபவங்களை உள்வாங்கிக் கொண்டு நமது வாழ்வைச் செப்பனிடவும், உறுதியாக்கவும் இனத்தின் மீதான கரிசனை அவசியம் தேவை என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்வது அவசியம். இதுவே இளம் சமுதாயத்தினருக்கு நாம் கொடுக்கும் ஊட்டமாக இருக்கும்.

பிலால் மம்பெட் என்ற கவிஞர் எழுதிய கவிதையொன்று இதனோடு தொடர்பாக ஞாபகத்திற்கு வருகின்றது.

மூடுபனியுள்ளுறைந்து கிடைக்கிறதிந்நிலம்
இப்பனி எங்கிருந்து வருகிறது?
அந்த அடர்ந்த மரங்களில்
விரிசலாய்க் கிடக்கின்ற புல்வெளிகளில்
கருமெனத் தெரிகிற பாறைகளில் இருந்தா
இக்குளிர்ப்பனி வருகின்றது?
இது - உடனேநான்
அடையாளம் கண்டிருக்கக்கூடிய
என்தேசத்துப் பனியல்ல!
இப்பனி எங்கிருந்து வருகிறது?
எல்லாமிங்கு மாறிப்போகின்றது
பழமரங்களில் வரிசைகள் ஒழுங்கற்றும்,
நீண்ட புல்வெளிகள் மிதந்து சென்றும்
எல்லாம் வேறு வடிவம் கொள்கின்றன!
வெற்றுப்பெருநிலமே விரிசலாய் எங்கும்
கண்ணில் படுகின்றது.
இது _ பசியினைப் போக்காத
பெரும் வெளி
இந்தக் கல்நிறைந்த பாதைகள்
போகவிடாமல் அழைக்கின்றனவென்னை,
நட்புமிகு ஆத்மாக்களும் சிலவேளைகளில்
என் துயரங்களை தழுவிச்
சுகப்படுத்துகின்றன.

விருந்தினர் எவரும்
தன் வீடேகவேண்டுமொருநாள்.

எந்தப் பூமியை நான்
என் தாய் நாடென்பது@

'அதிகாரவர்க்க முறைகளையும், வன்முறைகளையும், எழுத்துச் சுதந்திரங்களையும், வசதி வாய்ப்புகளையும் பயன்படுத்தி அழிக்கப்படும் உண்மைகள், எப்பொழுதும் கீழ்படிவதில்லை. பொய்கள் எத்தனை வலிமையுடையதாக உலகம் முழுக்க ஊர்வலம் வந்தாலும், அவற்றை எதிர்கொண்டு தூய்மையான அரசியல் தீர்வொன்றைப் பெற உண்மையின் சிறுபொறி மட்டும் போதுமானது' என்ற நம்பிக்கை எமக்குள் விரிகின்றது.●

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**


(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு

On high, with your thoughts



PRO MAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்

இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்

www.promarawards.com 416-291 2344

585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5



வே. விவேகானந்தன்

# கனடாவின் கிழக்குக் கரை கடல்சார் மாகாணங்கள் 4

எமது உல்லாசப்பயணத்தின் ஐந்தாம் நாள் (27-07-2018) காலை, நாம் தங்கியிருந்த விடுதியில், காலை உணவை முடித்துக் கொண்டு, பத்து மணியளவில், கியுபெக் மாகாணம் நோக்கிப் புறப்பட்டோம். வழமை போல திரு. கிரீசன் தனஞ்ஜெயன் அவர்களின் தேவாரப் பண்ணிசையும், திருமதி கருணாநிதி ஜீவநாதன் அவர்களின் கிறீஸ்தவப் பாடல்களுடனும் இறை வணக்கம் இடம் பெற்றது. மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருந்ததால், அன்றைய தினம் பேருந்திலேயே எமது பொழுது கழிந்தது. எனினும் மகிழ்ச்சியாகவும், பரபரப்பாகவும், கலகலப்பாகவும் நேரம் போவதே தெரியாமல் நிகழ்வுகள் அமைந்தன. முதலில் எமது பயண முகவரும், வழிகாட்டியுமான திரு. அக்பர் அசீஸ் கனடாவில் தனது ஆரம்பகால அனுபவங்கள் பற்றிக் குறிப்பிட்டார். குறிப்பாக முப்பது வருடங்க -ளுக்கு முன்னர் கனடாவின் கிழக்குக் கடல்சார் மாகாணங்களில் வெள்ளையரல்லாத இனத்தவர்களைக் காண முடியாதெனவும், தற்செயலாக அவ்வாறானவர்களைக் கண்டால், அங்குள்ள மக்கள் அவர்களை விநோதமாகப் பார்த்ததாகவும் குறிப்பிட்டார்.

பரமேஸ்வரி யோகராஜா தனது வாழ்க்கை அனுபவங்களை, ஏனையவர்களுடன் பகிர்ந்து கொண்டார். அதுபோலவே ஏனையவர்களும் தங்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மதியம் ஒரு மணியளவில் சிறியதொரு பூங்காவில் பேருந்தினை நிறுத்தி, அன்று சமைத்த, எமது பாரம்பரிய உணவான சோறுடன் சோயா கறியும், கத்தரிக்காய் பால்கறியும் மதிய உணவாக மகிழ்ச்சியுடன் உண்டோம். சிறிது நேரத்தில் எமது பயணத்தை மீண்டும் தொடர்ந்தோம். பூவா தலையா திரைப்படம் போடப்பட்டது. பலர் பார்த்து ரசித்தனர், சிலர் கண்ணயர்ந்து இளைப்பாறினர், தேன் வாங்கும் ஆர்வம் கொண்ட பலரது விருப்பத்தை நிறைவேற்ற, வழிகாட்டி அக்பர் அசீஸ் அவர்களும், பேருந்தின் சாரதி, யோகராஜா அவர்களும் இணங்கி, நெடுஞ்சாலையிலிருந்து வெளியேறிப் பல மைல்கள் காட்டு வழியே பயணித்து, தேன் பண்ணையுடன் கூடிய தேன் விற்பனை நிலையம் ஒன்றைக் கண்டு பிடித்தனர்.

அங்கு பல்வேறு அளவுகளிலும், பல்வேறு விலைகளிலும் தேன் போத்தல்களும், இனிப்பு வகைகளும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அவற்றுள் தேவையான அளவை வாங்கிக்கொண்டு எமது பயணத்தைத் தொடர்ந்தோம். அப்போது கந்தவேள் பொன்னம்பலம் அவர்கள், தேனின் பயன்பாடு, அதன் மருத்துவக் குணங்கள் போன்ற விடயங்கள் பற்றித் தனது கருத்தைப் பகிர்ந்து கொண்டார். திரு. இராசையா சுப்பையா அவர்கள் தேனின் வகைகள், அவை சேகரிக்கப்படும் விதம் என்பன குறித்து விளக்கமளித்தார். இறுதியாக, மாலை ஏழு மணியளவில் கியுபெக் மாகாணத்திலுள்ள Days Inn விடுதியை அடைந்தோம். அன்றிரவு அவித்த மரவள்ளிக் கிழங்கு உணவாக வழங்கப்பட்டது. அதனை மகிழ்வுடன் உண்டு நித்திரைக்குச் சென்றோம்.

எமது சுற்றுலாப் பயணத்தின் ஆறாம் நாள் காலை உணவை முடித்து கியுபெக் நகரை சுற்றிப் பார்க்கச் சென்றோம். இது கியுபெக் மாகாணத்தின் தலை நகரமாகும். நாநூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்த இந்த நகரம் பிரான்சிய கடலோடியும், கண்டுபிடிப்பாளருமான Samuel de Champlain அவர்களால் 1608 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. பின்னர் லொறன்ஸ் நதிக்கரை வழியே உருவாகிய பிரான்சியக் குடியிருப்புகளுடன் இணைக்கப்பட்டு புதிய பிரான்சின் தலைநகரமாக விளங்கியது. 1760ம் ஆண்டு பிரித்தானிய காலனியாக இது மாறியது. ஏறக்குறைய 135 ஏக்கர் பரப்பளவு கொண்ட கியுபெக் நகரம், மேல்நகரம் கீழ்நகரம் என இரு பகுதிகளாகக் காணப்படுகிறது. மேல்நகரத்தின் அடையாளக் கூறுகளாகப் பாதுகாப்பு அரண்களும், கோட்டைகளும் காணப்படுகின்றன. வடஅமெரிக்காவிலேயே இன்றுவரை இவற்றைப் பேணிப் பாதுகாத்து வரும் நகரமாக கியுபெக் விளங்குவது, அதன் தனிச்சிறப்புக்கு ஒரு காரணமாகும்.

கீழ்நகரத்தில் அரச திணைக்கள கட்டடங்கள், பாராளுமன்றம், துறைமுகம் என்பன காணப்படுகின்றன. இங்குள்ள பழைய வீடுகளின் அமைப்பில், பிரான்சிய கட்டடக்கலைப் பண்புகள் பிரதிபலிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சிறிது நேரம் ஓய்வின்பின், உல்லாசப் பயணிகளைக் கவரும், Canyon Sainte-Anne என்ற இயற்கை அழகு கொட்டிக் கிடக்கும் நதிப் பள்ளத்தாக்கினைப் பார்த்தோம். மிக உயரமான பாறைகளுக்கிடையே, மிக ஆழத்தில், மிக வேகமாகப் பாயும் ஆறுகள் என மனதை உறையச் செய்யும் காட்சியது. இப் பாறைகள் 350 மில்லியன் வருடங்கள் பழமையானவை எனவும், மிகக் கடினமானவையாகவும், நீரால் அரிக்கப்பட முடியாதன எனவும் கூறப்படுகின்றது. இப் பாறைகளில் பழங்குடி மக்களே ஏறிஇறங்கக் கூடிய மனவலிமையும், உடலுறுதியும் கொண்டிருந்தார்கள். நதிப் படுக்கைகளிலிருந்து 197 அடி உயரத்தில் அமைக்கப்பட்ட தொங்குபாலம் உட்பட, மூன்று தொங்குபாலங்கள் அமைக்கப்பட்ட பின்னரே, உல்லாசப் பயணிக-ளைக் கவரும் இடமாக மாறியது. 1973ம் ஆண்டுக்குப் பின்னரே, உல்லாசப் பயணிகள் சட்டபூர்வமான அனுமதிக்கப்பட்டனர். மனப் பயத்தையும், உடல்நடுக்கத்தையும் தரக்கூடிய இத் தொங்குபாலங்கள் ஊடாக எம் முதியவர்கள் அச்சமின்றியும், உற்சாகத்துடனும், கலகலப்பாகவும் நடந்து சென்றமை, அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இடையே மழைவந்து குறுக்கிட்ட போதும் அது பற்றி யாரும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

அன்றையதினம் இறுதியாக, ஏறக்குறைய 350 வருடத்திற்கு மேற்பட்ட பழமையும் பெருமையும் வாய்ந்த Shrine of Sainte Anne de Beaupre என்ற தேவாலயத்திற்குச் சென்றோம். புனரமைக்கப்பட்ட இத்தேவாலயத்தின் மிகப் பிரமாண்டமான கட்டட அமைப்பும், கண்ணைக்கவரும் பல் வர்ணப் பூச்சுகளும், பல வகையான கண்ணாடிகள் பொருத்தப்பட்ட சாளரங்களும், உயர்தர மரங்களிலான கதவுகளும், பளிங்குக் கற்களினாலான தரைகளும் கண் கொள்ளாக் காட்சியாகும். நாம் சென்ற தினம் விசேட தினமாகையால் பெருந்தொகையான மக்கள் கூட்டத்தைக் காணக் கூடியதாயிருந்தது. பிரார்த்தனைகளும் இடம் பெற்றன. உள்ளே வழிபாட்டு மண்டபம் அமைதியாக இருந்தது. பலர் அமைதியாகப் பிரார்த்தனையில் இருந்தனர். இத்தேவாலயம் கிறீஸ்தவ மக்களினது, மத நம்பிக்கையின் உறைவிடமாகவும், வருடந்தோறும் ஒரு மில்லியனுக்கும் (30ஆம் பக்கம் வருக)



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# Xanadu 2.0 - ஒரு வீடு

எக்ஸ்நாடு (Xanadu) என்ற பெயர் என்ன ஒரு கருத்தை பிரதிபலிக்கிறது என்று பலருக்கும் தெரியாமல் இருக்கலாம். அது ஒரு வீட்டுக்கான பெயர் என்றால் பெரிய ஆச்சரியமே ஏற்படலாம். இந்த வீட்டுக்கு சொந்தகாரர் வேறு யாருமல்ல, உலகின் பணக்காரர் ஆன பில்கேட்ஸ் தான் அவர். இந்த வீட்டுற்கு இந்தப் பெயர் வரக்காரணமென்ன அதன் மகிமைகள் என்ன என்பது தான் முக்கியமானவை.

Xanadu என்பதன் அர்த்தம் 'தனித்துவமானது மரங்கள் கொண்ட ஒரு கற்பனை உலகம்' என்பதாகும் திபெத்திய இலக்கியம் கொண்டாடும் Shakari-La என்ற கந்தர்வ உலகம்போன்றது எனவும் பொருள் கொள்ளலாம். உலகில் மிக அபூர்வமான அழகான ஒரு இடமாகவும் இப்பகுதியை கொள்ள முடிகிறது. மொங்கோவியாவில் ஆட்சி புரிந்த குப்ளைகான் என்ற மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் (1260-1294) இவ்வாறான ஒரு கந்தர்வ வசந்த மாளிகையை அமைத்துள்ளதாக வரலாறு கூறுகிறது. இதன் மறுவடிவமாகவே பில்கேட்சின் இந்த வீடும் அமைக்கப்பெற்றுள்ளது.

பில்கேட்சின் வீடு 66,000 ச.அடி பரப்பளவு உள்ள பகுதியில் அமைவு பெற்றுள்ளது. இது வாசிங்டன் ஏரிக்கு எதிராக உள்ள மெடினா என்ற இடத்தில் உள்ளது. இந்த வீட்டினை கட்டுவதற்கு ஏழு வருடங்கள் எடுத்துள்ளன 300 கட்டிட தொழிலாளர்களும், 100 மின்னினைப்பாளர் - களும் இதில் பங்கு கொண்டுள்ளனர்.

ஏழு படுக்கை அறைகளையும், 24க்கு மேற்பட்ட குளியல் அறைகளையும் கொண்ட இந்த வீட்டினை நிறுவ 106 கோடி அமெரிக்க டாலர்கள் வரியாக செலுத்தப்பட்டுள்ளது. இவ்வீட்டின் வரவேற்பு அறையில் 200 பேர் வரை உட்காரலாம். சுவரில் 22 அடி அகலமான வீடியோவும் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த வீட்டினது கீழ் தளத்தில் 10 கார்களை நிறுத்தலாம். சுவர்களும் தரையும் சிமெண்ட், எவர்சில்வர் கலவை கொண்டதாக உள்ளது. இங்கு வரும் பெரியவர்களும், சிறியவர்களும் குதித்து விளையாட ட்ராம்போலின் (Trampoline) எனப்படும் எலாஸ்ரிக் தளம் உள்ளே அமைக்கப் பெற்றுள்ளது. இது கூட 2,500 ச.அடியாகும்.

இந்த வீட்டில் நிறைய நூல்கள் உண்டு. பிரபல ஓவியர் லியானாடோ டாவின்சியின் பிரபல ஓவியமும் உள்ளது. இதனை 30.8 மில்லியன் டாலர் விலை கொடுத்து வாங்கியிருக்கிறாராம்.

60 அடி நீளம் கொண்ட நீச்சல் தடாகம் 3900ச.அடி நிலப்பரப்பில் தனியாக அமைக்கப்பெற்றுள்ளது. பில்கேட்ஸின் விருப்பத்திற்குரிய மேப்பிள் மரம் 40 வயது நிறைந்தது. இதனை வீட்டுக்கு முன்னால் வைத்திருக்கிறார். அதனை கணினி மூலம் 24 மணிநேரமும் கண்காணித்து வருகிறார்.

இவரது வீடு Xanadu 2.0 என்று பதியப்படுகிறது. 21ஆம் நூற்றாண்டின் புதிய சொல்லாட்சி 2.0 ஆகும். மிக உயர்ந்தது என்றே இது பொருள் தருகிறது. 18.5 பில்லியன் டாலர் சொத்துகளை கொண்ட பில்கேட்ஸ் 123 மில்லியன் டாலர் பெறுமதியான வீடு கட்டுவது பிரமாதமா என்ன!

HERITAGE
Education Funds
RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

# ஒரு தமிழர் உட்பட 4 இந்தியர்கள் அமெரிக்க இடைக்கால தேர்தலில் வெற்றி



அமெரிக்காவில் நடந்த இடைக்காலத் தேர்தலில் இந்தமுறை அதிக அளவில் இந்தியர்கள் வெற்றி பெற்றனர். இந்த தேர்தலில் தமிழரும் ஒருவர் வெற்றிபெற்றுள்ளார்.

அமெரிக்காவில் கடந்த நவம்பரில் இத்தேர்தல்கள் நடைபெற்றன.

அமெரிக்காவில் நடக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கு நிகராக இந்தத் தேர்தல் பார்க்கப்படுகிறது. இதில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பின் குடியரசுக் கட்சி பெரும் தோல்வியை சந்தித்து இருக்கிறது. எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சி மாபெரும் வெற்றிபெற்றுள்ளது.

இந்தத் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பாக போட்டியிட்ட தமிழரான ராஜா கிருஷ்ணமூர்த்தி வெற்றி பெற்றார். இவர் இரண்டாவது முறையாக இல்லினாய் தொகுதியில் இருந்து பிரதிநிதிகள் சபைக்கு தெரிவாகி உள்ளார். தமிழகத்தைச் சேர்ந்த இவர் டெல்லியில் வசித்து வந்தார். பல வருடங்களுக்கு முன்பே அமெரிக்கா சென்ற இவர் அங்கு பிரின்ஸ்டன் பல்கலையிலும் ஹார்வேர்ட் பல்கலையிலும் படித்துள்ளார். சக இந்தியரான குடியரசுக் கட்சியை சேர்ந்த ஜெடி டிகன்கேரை 30 சதவிகித வாக்கு வித்தியாசத்தில் இவர் தோற்கடித்துள்ளார்.

இந்தத் தேர்தலில் கேரளாவை பூர்விகமாக கொண்ட பிரமிளா ஜெயபால் வெற்றிபெற்றுள்ளார். இந்தத் தேர்தலில் வென்ற ஒரே இந்திய பெண் இவர்தான். இவர் கேரளாவை சேர்ந்தவர் என்றாலும் பிறந்து வளர்ந்தது எல்லாம் சென்னையில்தான். ஜனநாயகக் கட்சி சார்பாக வாஷிங்டன் தொகுதியில் இருந்து பிரதிநிதிகள் சபைக்கு தெரிவாகியுள்ளார். 60 சதவிகித வாக்கு வித்தியாசத்தில் இவர் வென்றுள்ளார்.

மூன்று முறை பிரதிநிதிகள் சபைக்கு தெரிவாகியுள்ள இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் அமி பேரா இந்த முறையும் பிரதிநிதிகள் சபைக்கு தெரிவானார். கலிபோர்னியா தொகுதியில் இவர் வென்றுள்ளார். இவரும் குடியரசுக் கட்சியை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் வெறும் 5 சதவிகித வாக்கு வித்தியாசத்தில்தான் இவர் வென்றுள்ளார்.

பஞ்சாப்பை பூர்விகமாகக் கொண்ட ரோ கண்ணா அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தவர். இவர் சிலிகான் வாலியில் போட்டியிட்டு குடியரசு கட்சி சார்பாக, 44 சதவிகித வாக்குகள் வித்தியாசத்தில் வென்றுள்ளார். மேலும் 9 இந்தியர்கள் மாநில சபைகளுக்குத் தெரிவாகி உள்ளனர்.●

# கல்வியில் சாதனை

மரபணுக்கள் எந்த அளவுக்கு கல்வியில் சாதனை புரிவதற்குக் காரணமாக இருக்கின்றன என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. இரட்டையர்களைப் பயன்படுத்து - வதின் மூலமாக, மரபணு காரணிகளின் வித்தியாசங்கள் குறித்த வீதங்களைக் கணக்கிட முடிந்தது. ஒரு குறிப்பிட்ட பண்பை எடுத்துக் கொண்டால், ஒரே மாதிரியான இரட்டையர்களின் மரபணு 100 சதவீதம் ஒத்துப் போகிற அதேவேளையில், மாறுபட்ட இரட்டையர்களின் மரபணுக்கள் சுமார் 50 சதவீதம்தான் ஒத்துப் போகின்றன.

அதாவது ஏனைய உடன் பிறந்தவர்களைப் போல. "பாடசாலைக் கல்வியில் சாதனை" போன்ற குறிப்பிட்ட சில பண்புகளில், மாறுபட்ட இரட்டையர்களை விட, ஒரே மாதிரியான இரட்டையர்கள் ஒத்துப் போனால், அது மரபணுக்களால் ஏற்படுகிறது என்று நாம் ஊகிக்கலாம்.

இதனை வைத்து குறிப்பிட்ட அந்தப் பண்பு எவ்வாறு பாரம்பரியமாக தொடர்கிறது அல்லது எந்த விகிதாசாரத்தில் வித்தியாசப்படுகிறது என்பதைக் கணக்கிட முடியும். 70 சதவீத சாதனைகளின் நிலைத்தன்மை என்பது மரபணுக் காரணியால் நிர்ணயிக்கப்படுகிறது என்பது கண்டுபிடிக்கப்பட்டது●.

# இயற்பியலுக்கான நோபல்: அமெரிக்கா, பிரான்ஸ், கனடா விஞ்ஞானிகளுக்கு




2018ம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசு, லேசர் இயற்பியல் குறித்த புதிய ஆய்வுகளுக்காக, அமெரிக்கா, பிரான்ஸ், மற்றும் கனடா நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மூவருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் உள்ள நோபல் பரிசுக் கமிட்டியினர் இதனை வெளியிட்டனர். 2018ம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசானது லேசர் இயற்பியல் குறித்த புதிய ஆய்வுகளுக்காக, அமெரிக்கா, பிரான்ஸ், மற்றும் கனடா நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மூவருக்கு வழங்கப்பட்டது. அமெரிக்காவின் ஆர்தர் ஆஷ்கின், பிரான்ஸின் ஜெரால்டு மௌரோ மற்றும் கனடாவைச் சேர்ந்த பெண் விஞ்ஞானியான டோனா ஸ்ட்ரிக்லாண்ட் ஆகிய மூவருக்கும் 2018ம் ஆண்டுக்கான இயற்பியலுக்கான நோபல் பரிசானது கூட்டாக வழங்கப்பட்டது. 118 ஆண்டுகால நோபல் பரிசு வரலாற்றில் இயற்பியலுக்கான நோபல் பரிசு பெறும் மூன்றாவது பெண் கனடியரான டோனா ஸ்ட்ரிக்லாண்ட் என்பது குறிப்பிடத்தக்கது.●

## கனடாவின்...

மேற்பட்ட யாத்திரிகர்களை கவரும் சக்திமிக்க மத தாபனமாகவும் விளங்குகிறது. இங்கு நாம் அனைவரும் பிரார்த்தனை செய்து, மன அமைதியுடன் மாலை Z Plaza Hotel ஐ அடைந்தோம். இரவு உணவின் பின்னர், எமது பயணத்தின் கடைசி இரவினை நிம்மதியாகக் கழித்தோம்.

மொன்றியல் நகரிலுள்ள Saint Joseph's Oratory ரோமன் கத்தோலிக்க தேவாலயத்தை தரிசிக்கச் சென்றோம். இது கனடாவிலேயே மிகப் பெரிய தேவாலயம் எனவும், உலகிலேயே மிக உயர்ந்த, குவியமான (Dome) கூரையைக் கொண்ட தேவாலயங்களுள் ஒன்று என்ற பெருமையையும் கொண்டது. இத்தாலிய கட்டடக்கலைப் பண்புகளைக் கொண்ட இத்தேவாலயம், 1904ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1917ம் ஆண்டு கட்டிமுடிக் - கப்பட்டது. தேவாலயத்தில் சென்.ஜோசெப் தேவனின் சிலை பிரதிஷ்டை செயப்பாட்டு, பிரார்த்தனை நடைபெற்று வருகிறது. ஊனமுற்றவர்கள் இங்கு வந்து வழிபடுவதன் மூலம், ஊனம் நீங்கி சுகதேகிகளாகத் திரும்புகின்றனர், என்ற நம்பிக்கையும் உண்டு. இதற்கு ஆதாரமாக, தேவாலயத்தின் ஒரு பகுதியில் ஊனமுற்றவர்கள் பயன்படுத்திய ஊன்றுகோல்கள், சக்கரநாற்காலிகள் என்பன மக்கள் பார்வைக்காக, காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 2004ம் ஆண்டு இதன் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு கனடாவின் தேசிய வரலாற்று சின்னமாக அறிவிக்கப்பட்டது. கனடிய தபால் சேவையும் (Canada Post) விசேட தபால் தலையினை வெளியிட்டது. இத்தகைய சிறப்பு வாய்ந்த தேவாலயத்தில் நாம் அனைவரும் பிரார்த்தனை செய்து மனத்திருப்தி அடைந்தோம்.

இறுதியாக ஆயிரம் தீவுகளை, (Thousand Islands) படகில் சுற்றிப் பார்த்து, அழகிய மாலைக் காட்சியைக் கண்டு களித்தோம். அதனைத் தொடர்ந்து எமது பேருந்து, மார்க்கம் நகரை நோக்கி விரைந்தது. அப்போது சுற்றுலாவில் கலந்து கொண்ட அனைவரும், தமது அபிப்பிராயங்களையும், அனுபவங்களையும் ஏனையவர்களுடன் பகிர்ந்து கொண்டனர். மேலும் மார்க்கம் முது தமிழர் மன்றத்தினருக்கும், சிறந்த வழிகாட்டியாகப் பணியாற்றிய திரு. அக்பர் அசிஸ் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. சுற்றுலாவில் கலந்து கொண்ட பலருக்கு, ஐம்பது பேருடன், ஏழு நாட்கள், பயணித்தமை இதுவே முதற் தடவை என்பதும் அறியக்கூடியதாக இருந்தது.








குரு அரவிந்தன்

# சாலை இளந்திரையன்

சாலை இளந்திரையன் அவர்களின் இயற்பெயர் வ. இரா. மகாலிங்கம் என்பதாகும். இவர் திருநெல்வேலி மாவட்டம், களக்காட்டிற்கு அருகில் உள்ள சாலை நயினார் பள்ளிவாசல் என்னும் ஊரில் 1930 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 6 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார் பெயர் வ. இராமையா, தாயார் பெயர் அன்னலட்சுமி. தமிழ்ப் பேராசிரியர், திறனாய்வாளர், சொற்பொழிவாளர், கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், அரசியற் செயற்பாட்டாளர், தமிழ்த்தேசியச் சிந்தனையாளர் என்று பன்முக ஆளுமை கொண்டவராக இவர் இருந்தார்.

இவர் களக்காட்டில் உள்ள தொடக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு வரையும் பயின்றபின், தொடர்ந்து டோணாவூரில் உள்ள நடுநிலைப் பள்ளியில் எட்டாம் வகுப்பு வரை பயின்றார். அதைத் தொடர்ந்து பாளையங்கோட்டையில் உள்ள தூய யோவான் உயர்நிலைப் பள்ளியில் பதினொராம் வகுப்பு வரை பயின்றார். கல்லூரிப் படிப்பிற்காக 1950 ஆம் ஆண்டு வரை சென்னை பச்சையப்பன் கல்லூரியிலும், தொடர்ந்து சென்னை மாநிலக் கல்லூரியிலும் பயின்று கலை இளவர் பட்டமும், கலை முதுவர் பட்டமும் பெற்றார். இவர் கல்விகற்ற கல்லூரிகளில் பேராசிரியர் மு. வரதராசன், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் போன்றோர் இவருக்கு வழிகாட்டிகளாக அமைந்தனர். அதன் பின்னர் 1971ஆம் ஆண்டு 'தமிழ்நாட்டுப் பழமொழிகள்' என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழகத்தில், முனைவர் பட்டத்திற்கான ஆய்வினை மேற்கொண்டு, மெய்யியல் முனைவர் பட்டம் பெற்றார்.

இவரது கவிதை, கதை போன்றவை பிரசண்ட விகடன் என்ற இதழில் இரா. இளந்திரையன் என்ற புனைப்பெயரில் வெளிவந்தன. தொடர்ந்து பிரசண்ட விகடன், தமிழ்ப் பொழில் போன்ற பல இதழ்களில் இவரது இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், கதைகள் வெளிவந்தன. திராவிட இயக்கத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாக சங்ககால மன்னனான இளந்திரையனின் பெயரையும், தன்னுடைய ஊர்ப்பெயரின் முற்பகுதியில் உள்ள சாலை என்ற பெயரையும் இணைத்து, சாலை இளந்திரையன் என்ற பெயரில் இவர் அரசியல், இலக்கிய உலகிற்கு அறிமுகமானார்.



1954 ஆம் அண்டு தொடக்கம் 1957ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழ்த் துறையில் ஆசிரியர் பணியை மேற்கொண்டார். 1954ம் ஆண்டு விருதுநகரைச் சேர்ந்த கனகசவுந்தரி (சாலினி) என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். 1959ம் ஆண்டு டெல்கி பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை விரிவுரையாளராகப் பணியேற்ற இவர் 1983ம் ஆண்டு தமிழ்துறை பேராசிரியராகவும் பதவி உயர்வு பெற்றார். 1985ம் ஆண்டு ஓய்வு பெற்ற இவர் தமிழகம் திரும்பிச் சென்னையில் சாலை அச்சகத்தை உருவாக்கினார். டெல்கி தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட சுடர் என்னும் இதழின் ஆசிரியராக 1960ம் ஆண்டு முதல் 1971ம் ஆண்டு வரை இவர் பணியாற்றினார். இதைவிட 1987ம் ஆண்டுவரை அறிவியக்கம் என்னும் இதழிலும், 1993ம் ஆண்டு வரை வீரநடை அறிவியக்கம் என்னும் இதழிலும் அறிவியக்கப் பேரவையின் சார்பில் சிறப்பாசிரியராகப் பணியாற்றினார். தமிழ் இலக்கியத்தில் கொண்ட ஈடுபாடு காரணமாக 1961ம் ஆண்டு சிங்கப்பூர், மலேசிய நாடுகளுக்கும் 1962ம் ஆண்டு இலங்கைக்கும் இலக்கியப் பயணம் மேற்கொண்டார். மீண்டும் 1974ம் ஆண்டு நான்காவது உலகத் தமிழ்மாநாட்டின் பொழுது இலங்கைக்குச் சென்று வந்தார். இந்த உலகத் தமிழ் மாநாட்டின் பொழுது அங்கு கூடிய தமிழறிஞர்கள் 'உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம்' என்னும் அமைப்பை உருவாக்கியபோது, அப்பணியில் சாலை இளந்திரையன் முக்கியப் பணியாற்றினார்.

1964ம் ஆண்டு டெல்கியில் உள்ள கீழ்க்கலை ஆராய்ச்சி மையம் நடத்திய மாநாட்டில் கலந்து கொள்வதற்காகத் தனிநாயகம் அடிகள் போன்ற பல தமிழறிஞர்கள் உலகின் பல பகுதிகளிலிருந்து வருகை தந்த போது, சாலை இளந்திரையனும் அவர்களுடன் இணைந்து உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தை உருவாக்கினார்கள். இக்கழகமே உலகத் தமிழ் மாநாடுகளை தற்போது நடத்துகின்றது. 1968ம் ஆண்டு இந்தியப் பல்கலைக் கழக தமிழாசிரியர் மன்றம் என்னும் அமைப்பை உருவாக்கவும், 1971ம் ஆண்டு அறிவியக்கப் பேரவை என்னும் அமைப்பை உருவாக்கவும், 1980ம் ஆண்டில் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தை உருவாக்கவும் முன்னின்று உழைத்தார்.


பாவேந்தர் பாரதிதாசனின் இலக்கியக் கொள்கையை ஆதரித்த இவர் மீது 'தமிழ், தமிழன், தமிழ்நாடு' என்னும் நூலை எழுதியதற்காக குற்றவியல் வழக்குத் தொடரப்பட்டது. பொதுவுடைமைத் தமிழ்தேசியத்தை தன்னுடைய சமூக அரசியற் கொள்கையாகக் கொண்ட இவருக்கு 1991ம் ஆண்டு பாரதிதாசன் நூற்றாண்டு நிறைவு விழாவில் பாரதிதாசன் விருது வழங்கப்பட்டது. சுமார் 75 நூல்களுக்கு மேல் தொகுத்தும், எழுதியும் வெளியிட்டு தமிழ் இலக்கிய உலகிற்குத் தொண்டாற்றிய இவர் மார்பு நோயால் பாதிக்கப்பட்டு, அக்டோபர் மாதம், 4ஆம் திகதி 1998ம் ஆண்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவரது விருப்பப்படியே அவரது உடல் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு ஆய்விற்காக அளிக்கப்பட்டது.●


Best Catering
நந்தா உணவகம்
in Town!
NANTHA CATERS
நகரில் சுவைகுன்றா உணவுகளுக்கு ஒரே இடம்
416 NANTHA 1 (416 626 8421)
Brimley & Steeles - 4915 Steeles Ave. E.
Warden & Finch -3268 Finch Ave. E.
Kipling & Steeles - 5010 Steeles Ave. E.


வீடு வாங்க... விற்க... உங்கள் பிரதிநிதி
Rave P. Raveenthiran
Sales Representative
HomeLife/Future
Realty Inc. Brokerage
Independently Owned and Operated
205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
Dir: 416-567-2462
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
ravehomes@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS


ATTIC INSULATION
கோடை காலத்தில் குளிராக்கும் செலவினை குறைக்கவும்
குளிர் காலத்தில் வெப்பமாக்கும் செலவினை குறைக்கவும்
கூரை உக்குதல். பூஞ்சணம் பிடித்தல் போன்றவற்றை தடுக்கவும்
பரண் (ATTIC) உள்ளீடு செய்திடுங்கள்!!!
Stay Warm in Winter. Be Cool in Summer.
Spray Foam Insulation
Attic
Walls
Ceiling
Garage
Crawl Space
SuPa. Raventhiran
416-847-7171
ENERecon Insulation


NKS Draperies & Blinds
210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420
• Vertical blinds
• Venetian blinds
• Draperies
• Curtains
• Shutters
உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட
அழையுங்கள்
கேதா
தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்


BRACE FOR A GREAT SMILE
DR. ILLANGO & ASSOCIATES
ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT
Dental Office
SCARBOROUGH
Kennedy / Finch Ave.
3852 Finch Ave. East
Suite 204 & 303
Scarborough, ON
Tel: 416-292-7004
BRAMPTON / MISSISSAUGA
Steeles / Hurontario
7920 Hurontario Street
Unit # 37
Brampton, ON
Tel: 905-457-1700
MARKHAM
Markham / 16th Ave.
(New Location)
9500 Markham Road
Unit # 107
Markham, ON
905-47 BRACE (27223)



எஸ். காந்தி

# 2018 வருமானவரி

2019 ஆண்டு பிறந்துவிட்டது. புதியவருடத்துக்கானபொருளாதாரத் திட்டமிடல் மற்றும் அதற்கான செயற்பாடுகளை பலர் ஆரம்பித்தும் இருப்பீர்கள். கடந்த வருடத்தில் உழைத்த வருமானத்திற்கு கணக்கு காட்ட வேண்டிய செயற்பாடு இந்த மாதத்தில் ஆரம்பமாகின்றது.

கடந்த வருடம் (2018) நாம் உழைத்த வருமானம், முதலீட்டு வருமானம் போன்றவற்றுக்கு கணக்கு காட்ட வேண்டிய காலம் 2019 ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஏப்பிரல் மாதம் வரை.

எம்மவர்களில் சிலர் இதில் கவனம் செலுத்துவதில் குறைவாக இருப்பது இப்பொழுதும் நடைமுறையில் காணக்கூடியதாக உள்ளது. இதனால் அவர்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புகள் எப்படியானது என்பது சிலருக்குத் தெரிவதில்லை. சிலர் அதைத் தெரிந்தும் அதற்கான முக்கியத்துவத்தினை கொடுப்பதில்லை. காரணம், வேலைப்பளு அல்லது அலட்சிய தன்மை, நம்பிக்கையீனம். இப்படியானவற்றில் ஒரு காரணம் அல்லது இரண்டு மூன்று காரணங்களாகவும் இருக்கலாம். இப்படியான ஒரு சிலரை நானும் வருமானவரிப் பத்திரம் பூர்த்தி செய்து கொடுப்பவன் என்கின்ற நிலையில் அனுபவத்தின் அடிப்படையில் காணக் கூடியதாகவுள்ளது.


CRA என்று சுருக்கமாக அழைக்கப்படும் “Canada Revenue Agency” - இதனை எமது மொழியில் கூறுவதாயின் “கனடா வருமானவரி முகவர்” எனலாம். இவர்கள் தாமதமாக வரிப் பத்திரம் பூர்த்தி செய்து அனுப்புவர்களுக்கு அவர்களின் நிலுவைக்காக செலுத்த வேண்டிய தொகையின் 5 சதவீதத்தை தண்டனைப் பணமாக அறவிடுவார்கள். உதாரணத்திற்கு ஒருவர் 1000 டாலர்கள் நிலுவைப் பணமாக செலுத்த வேண்டியிருக்கும் சந்தர்ப்பத்தில் அவர் மே மாதம் முதலாம் திகதி தன்னுடைய கணக்கினை சமர்ப்பிக்கும் பொழுது 1050 டாலர்கள் செலுத்த வேண்டியிருக்கும். இதனை ஏப்பிரல் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பித்திருந்-தால் 50 டாலர்களை மேலதிகமாக செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. இதே நபர் இதனை யூன் மாதம் 30ம் திகதி சமர்ப்பித்தால் 1070 டாலர்களை செலுத்த வேண்டி வரும். காரணம் ஒவ்வொரு மாதத்திற்கு ஒரு சதவிகித வட்டி மேலதிகமாக செலுத்த வேண்டி வரும்.

வருமானவரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லாதவர்களும் அரசாங்க உதவிப் பணமாக பல்வேறு வகையான பெயர்களில் உதவிப் பணம் பெறுபவர்கள் நேரகாலத்துடன் தமது கடந்த வருட வருமானம் என்ன என்பதில் சமர்ப்பிப்பதன் மூலம் தமக்கு கிடைத்து வரும் அரசாங்க மானியப் பணம் எவ்வித தடையுமின்றி தொடர்ந்து கிடைப்பதற்கான சாத்தியங்கள் உண்டு. இப்படியான உதவி பெறுபவர்களில் சிலர் தமக்கு வரவேண்டிய சலுகைகள் கிடைக்காத பொழுதுதான் விழித்துக் கொள்கின்றார்கள் தாம் இன்னும் வருமானவரிப் பத்திரம் சமர்ப்பிக்கவில்லை என்று. இவர்களுக்கு யூலை மாதத்திலிருந்து அரசு தனது சலுகைகளை நிறுத்துவதுண்டு. குறிப்பாக 18 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான மாதாந்தக் கொடுப்பனவு. மத்திய மாகாண அரசுகளின் விற்பனை வரியின் மீள் கொடுப்பனவு (GST/ HST CREDIT) என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

கணினி தொழில்நுட்பம் வருடாவருடம் வருமானவரிப் பத்திரம் பூர்த்தி செய்து அனுப்புவதி-லும் மற்றும் வரி மீளப் பெறுவதிலும் பல மாறுதல்களை கொண்டு வந்திருக்கின்றது. கடந்த வருடம் அதாவது 2017ம் ஆண்டு வருமானவரிப் பத்திரம் சமர்ப்பித்தவர்களில் ஏறத்தாழ 25 மில்லியன் கனடியர்கள் கணினி மூலம் தமது வருமானவரிப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளார்கள். இது மொத்த தொகையில் 87 சதவீதமாகும். தற்பொழுதும் 13 சதவிகிதமானவர்களே பழைய முறையான நடைமுறையை பின்பற்றுகின்றார்கள்.2019ம் ஆண்டிலிருந்து உங்கள் கைத்தொலைபேசியில் இருந்து உங்கள் வருமானவரி சம்பந்தப்பட்ட கணக்குகளை காலை 6 மணியிலிருந்து விடியற்காலை 3 மணிவரையும் 7 நாட்களும் பார்க்கக் கூடிய வசதிகளை ஏற்பாடு செய்துள்ளார்கள். இதற்காக நீங்கள் CRA Biz App என்னும் மென்பொருளை தரவிறக்கம் செய்தால் போதுமானது.

எல்லோரும் தமது வருமானவரிப் பத்திரத்தினை நேர காலத்துடன் பூர்த்தி செய்வதற்கான ஆயத்தங்களை செய்யுங்கள். 2019ம் ஆண்டு பெப்பிரவரி 26ம் திகதியிலிருந்து கணினி மூலமாக சமர்ப்பிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கும். அதற்கு முதல் RRSP யில் சேமிக்க விரும்புபவர்கள் தங்கள் நிதிநிறுவனங்களோடு தொடர்பு கொண்டு அதற்கான ஆயத்தங்களை செய்யலாம். காலதாமதமும் அலட்சியப் போக்குள்ள மனோபாவமும் நட்டத்தையே ஏற்படுத்தும்.

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer
வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்
37 வருட அனுபவம்

HONDA
TOYOTA
GM-MINI VANS
We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets

தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha
R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838

# JRS College

of Business and Health Care Inc.

"Committed to providing quality training"

Now we accept International Students

## DIPLOMA PROGRAMS

| | |
|---|---|
| 3D Animation for Video Games | (72 Weeks) |
| Community Service Worker | (52 Weeks) |
| Pharmacy Assistant | (46 Weeks) |
| NACC PSW 2015 | (35 Weeks) |
| Accounting & Payroll Administration 2017 | (44 Weeks) |
| Computer Networking & Security | (40 Weeks) |
| Health office administrator 2017 | (39 Weeks) |
| Early Childcare Assistant | (36 Weeks) |
| Computerized Accounting | (30 Weeks) |
| Office Assistant | (16 Weeks) |
| Enginering Design and Drafting Technologist | (28 Weeks) |
| Graphic Design Diploma | (34 Weeks) |
| Web Development | (43 Weeks) |
| Personal Support Worker Bridging | (20 weeks) |



## Certificate Courses

- Business Communication
- Cashier
- Bank Teller
- Food Service Worker
- Payroll
- Food Handler
- Simply Accounting
- Ms Office
- QuickBooks

We offer Free Computer Basic Class Every Month.



## FINANCIAL AID

**Financial Assistance available for those who qualify:**

- Receiving EI (Unemployment)
- Received EI within last 3 years
- Received Maternity leave within 5 years
- Social Assistance recipient

(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005.)

### Contact Info

(Midland & Finch)
330-4168 Finch Avenue East
Scarborough, ON M1S 5H6

**416-292-2455**

E-Mail: info@jrscollege.com
Web: www.jrscollege.com
Fax: (416) 292-2455

ISSN 1206-0585

